# கண்ணகி தேவி

# KANNAKI DEVI

BY

A. KARMEGA KONE,

Lecturer in Tamil and Head of the Dept.
of Indian Languages, American College, Madura

PUBLISHED BY THE AUTHOR

Copyright.] 1949 [Annas 8.

ஸ்ரீ

# கண்ணகிதேவி

இது
மதுரை அமெரிக்கன் காலேஜ்
தலைமைத் தமிழாசிரியர்
ஆ. கார்மேகக் கோனார்
எழுதியது.

காபிரைட்டு] 1949 [விலை அணா 8.

Revised Edition 1946
Second Edition 1947
Third Edition 1947
Fourth Edition 1949

Approved by the Text Book Committee, Madras.
Vide Page 17, Part II of Supplement to Part I-B,
of the Fort St. George Gazette dated 14th May, 1946.

The Premier Art Press, Madras.

# முகவுரை

வீரபத்தினியாகிய கண்ணகி தேவியின் வரலாறு, தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாய்ச்சிறந்து விளங்கும் சிலப்பதிகாரத்துள் விரித்துக் கூறப் பெறுவது. இஃது ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன் காவிரிப்பூம் பட்டினம், மதுரை, வஞ்சி என்னும் சோழ, பாண்டிய, சேர நாட்டுத் தலைநகரங்கள் மூன்றின் சம்பந்தமும் பெற்ற உண்மைச் சரித்திரமாகும். இச்சரிதம் நடந்த காலமும் இதனைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் காவியமாகப் பாடிய இளங்கோவடிகள் காலமும் ஒரே காலமாகும்; இதனால் இச் சரித்திரம், உண்மைக்கு எவ்வளவு மாறுபடாததாயிருக்கு மென்பது கூற வேண்டுவதில்லை.

கண்ணகி தேவி சரிதையில், பெண்களின் உயர்வும், கற்பின் தெய்வத்தன்மையும், ஒழுக்கத்திறனும், வினையின் விளைவும் முதலாய பல நீதிகளும் பொருளும் அமைந்திருக் கின்றன.

கண்ணகிதேவியின் வணக்கம் முற்காலத்துத் தமிழ்நாட் டிலன்றிப் பிற நாடுகளிலும் பிரபலம் பெற்றிருந்ததென்று இச்சரித்திரத்தால் அறியப்படுதற்கேற்ப, இப்போதும் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும், வடநாட்டிலும் பழைய பத்தினி கோயில்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அன்றியும், மதுரை வடக்குக் கோட்டை வாயிலிலுள்ள செல்லத்தம்மன் என்னும் துர்க்கை கோயில் அர்த்த மண்டபத்தில் தனிச் சந்நிதியோடு கண்ணகி விக்கிரகம்பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளதை இப்போதும் காணலாம். இவ்விக்கிரகம் இடக்கையில் சிலம்பு

பிடித்து மண்டியிட்ட கோலத்தோடு மிகுந்த உக்கிர ரூபத்துடன் விளங்குகிறது. இக்கண்ணகி படிமம் நெடுஞ்செழியனுக்குப் பிறகு சிம்மாதனம் ஏறிய வெற்றிவேற்செழியனால் பிரதிஷ்டை செய்ததாய் இருக்கலாமென்று கருதுதல் பொருந்தும்.

கண்ணகியின் வரலாற்றை இக்காலத்து நாடக ரூபமாக நடிக்கின்றவர்கள் உண்மைக்கு மாறாய்ப் பிழைபட நடித்துக் காட்டி வருகின்றனர். இக்கண்ணகி தேவி சரிதையைச் சிலப்பதிகாரத்தில் உள்ளவாறே மாணவர் அறிய வேண்டுமென்று கருதி, சிலப்பதிகார மூலத்தையும் அடியார்க்கு நல்லார் உரை நடையையும் பின்பற்றிச் செம்பாகமான நடையில் எழுதி வெளியிட்டுள்ளேன்.

இச்சிறு நூலைப் படிக்கும் மாணவர்கள் தமிழ் மொழி அறிவும், வசனநடைப் பயிற்சியும் அடைவதுடன் நம் தமிழ் நாட்டுப் பழைய வழக்க ஒழுக்க நாகரிகங்களையும், அறிந்து இன்புறுவார்களென்பது எனது துணிபாம்.

அசோதை அகம்,
கோகலே வீதி,
தல்லாகுளம்.

இங்ஙனம்,
ஆ. கார்மேகக் கோன்.



கண்ணகி தேவி

இது, மதுரை வடக்குவாசல் செல்லத்தம்மன் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் கண்ணகி தேவியின் பழைய படிமம்.

(இந்நூல் 55ம் பக்கம் 3-வது பாராவைப் பார்க்க)

ஸ்ரீ:

# கண்ணகி தேவி

## புகார் நகரச் சிறப்பு

நம் தமிழ் நாடானது பண்டைக்காலத்தில் சேர நாடு, சோழநாடு, பாண்டி நாடு என மூன்று பிரிவினதாய்ச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் மூவராலும் ஆளப்பட்டு வந்தது. சோழநாடு, கோடைகாலத்திலும் வெள்ளப் பெருக்குக் குன்ருத பொன்னி என்னும் காவிரியாறு பல கால்களாய்ப் பிரிந்து பாய்தலால், கன்னலும் செந்நெல்லும், இஞ்சியும் மஞ்சளும், வாழையும் கமுகும், தெங்கும் பலாவும், வயல்கள் எங்கும் செழித்து வளர்ந்து நிலமடந்தையின் நெற்றியிலிட்ட திலகம் போல விளங்கும். மருதநிலத்தூர்களின் அருகிலெல்லாம் கரும்பாலைகளும் நெற்கூடுகளும் கவின் பெற விளங்கும். காவிரி தன் தாயகமாகிய குடக மலையினின்றும் பல்வகைப்பொருளையும் ஏந்திக்கொணர்ந்து சொரிதலால் மலைவளமும், கீழ்த்திசையில் கடல் சூழ்ந்திருப்பதால் கடல் வளமும் உடையதாகும் இந்நாடு. எந்நாட்டினும் இந்நாட்டின் நெல் மிகுதி பற்றி இதனைப் புலவரெல்லாம் 'சோழ வளநாடு சோறுடைத்து,' எனப் புகழ்ந்து பேசுவர்.

இந்நாட்டில், இசையால் திசையெல்லாம் அறிந்து, போக புண்ணியங்களால் வசையின்றிப் பொலிந்து விளங்குவது பூம்புகார் என்னும் பட்டினம். இது காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகமென்னும் துறையில் அமைந்திருப்பதால் காவிரிப்பூம் பட்டினம் எனவும், ககந்தன் என்பான் ஆண்டமை

பற்றிக் காகந்தி எனவும் பெயர் பெறும். இது சோழ மன்னர் பரம்பரையாய் முடி சூடி வீற்றிருக்கும் தலை நகராகவும், சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் விளங்கமுற்றிருந்தது.

இந்நகர், புறநகர் அகநகர் என இரு பிரிவாய் அமைந்திருந்தது. புறநகர் மருவூர்ப்பாக்கம் எனவும் அகநகர் பட்டினப் பாக்கம் எனவும் பெயர் பெறும். புறநகரில் நிலா முற்றங்களும் மான்கண் சாளரங்களும் அமைந்த மாடங்கள் சோலைகளுக்கிடையே ஆங்காங்கு விளங்கிக்கொண்டிருக்கும். கூலவீதிகளில் நெல் முதலிய தானியங்களும், கடை வீதியில் முத்து, பவளம் முதலிய இரத்தின வகைகளும், பொன், பொற்பணி முதலியவைகளும், பட்டாடை முதலிய ஆடைவகைகளும் இவ்வளவென்று கணிக்கமுடியாத அளவு குவித்தும், தொகுத்தும்வைக்கப்பட்டிருக்கும். பூ, ஆரம், முகவாசம், சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்கள் விற்பார் வீதிதோறும் திரிவர். பட்டினாலும் பருத்தியாலும் எலி மயிராலும் ஆடை, கம்பளங்கள் நெய்யும் காருகர்களும், கொல்லர், தச்சர், கன்னார், சிற்பிகள், சித்திரகாரிகள் முதலிய தொழின்மாக்களும் வசிக்கும் வீதிகள் ஒரு பக்கத்திலிருக்கும்; பாணர், சிற்பியர், செம்மார், மீன் விலைஞர், உப்பு வாணிகர் முதலியோர் இருப்புக்களும் மற்றொரு பக்கமிருக்கும். அலைவாய்க்கரைகளில் வியாபாரத்தின்பொருட்டு மரக்கலங்களில் வந்திறங்கிய யவனர் (கிரேக்கர், ரோமர், எகிப்தியர்) என்னும் பரதேசிகளது சேரிகள் தனியாகச் செல்வத்தாற் சிறந்திருக்கும். சோழனது புலி முத்திரையிட்ட பொதிகளும், மூடைகளும் குவிந்து கிடக்கும் சுங்கச் சாலையும் (Custom House), கப்பல்களை அழைக்கும்

கலங்கரை விளக்கமும் (தீபஸ்தம்பம்-Light House) கடற்றுறையில் அழகுடன் விளங்கும்.

அகநகரின் நடுவே அரசவீதி விழா வீதிகளில், அரச மாளிகைகளும் அவற்றைச் சூழப் புரோகிதர், அந்தணர், மந்திரிகள், மருத்துவர், சேனதிபதிகள் முதலியோர் இருப்புக்களும், அறங்கூறும் அவையங்களும் (நியாய ஸ்தலம்) விளக்கமுற்றிருக்கும். இவற்றை அடுத்து ஆவண வீதிகளும், அருகில் வணிகர், வேளாளர், கோபாலர் முதலியோர் இல்லங்களும் சூழவிருக்கும். ஒரு பக்கலில் நாடகக் கணிகையர் வீடுகளும் இசைக்கருவியாளர் உறைவிடங்களும் காணப்படும். சூதர், மாகதர், சோதிடர் முதலியோரும் சில இடங்களில் வாழ்ந்தனர். ஆறு கிடந்தது போன்ற வீதிகளில் யானை, குதிரை, தேர் முதலியன இடைவிடாது சஞ்சரித்துக்கொண்டிருக்குமாதலால், மனிதர்கள் கவனமாகச் செல்லவேண்டியிருக்கும். அகநகர்க்கும், புறநகர்க்கும் இடையிலுள்ள பொதுவிடம், '**நாளங்காடி**' என்று சொல்லப்படும். அதில், பகற்காலத்தில் பெரிய கடைகள் கூடும்; பண்டங்களை விற்போர் ஓசையும், கொள்வோர் ஓசையும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும். அவ்விடத்தில் அற்புதம் நிறைந்த பல வகை மன்றங்களும், மண்டபங்களும் உண்டு. பழமரங்களும் பூஞ்செடி வகைகளும், நிழலுக்கும் அழகுக்கும் நிரைநிரையாக வளர்க்கப் பெற்றிருக்கும்.

நகரத்தில் திருமால் கோயிலும், பலதேவன் கோயிலும், சிவன் கோயிலும், வாசவன் கோயிலும், வச்சிரக் கோட்டமும், குமரகோட்டமும், அருகன் கோயிலும், புத்த விகாரமுமாகிய தேவாலயங்கள், ஆங்காங்குச் சிறு சிறு குன்றுகள் போல விளங்கிக் கொண்டிருக்கும். வித்தியா மண்டபங்களில் துறவிகளும் பண்டிதர்களும் புராணங்கள் படித்தும், வாதங்

கள் புரிந்தும் அமர்ந்திருப்பர். சுருங்கச் சொல்லு மிடத்து இக்காலத்து ஓர் இராசதானிக்கு எவ்வெவ் வகையான நாகரிகங்களும் அமைப்புக்களும் அவசிய மென்று கருதப்படுகின்றனவோ, அவையெல்லாம் அந்நகரில் அக்காலத்தில் அமைந்திருந்தனவென்று சொல்லலாம். அந்நகரத்தை அத்தகைய நாகரிகம் பெறத் திருத்திய முறையில் அமைத்து அரசாண்டவன், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் இருந்த வெற்றிவேந்தனாகிய கரிகாலன் என்னும் சோழ சக்கரவர்த்தியாவன்.

## கோவலன் வாழ்க்கை :

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பெருங்குடியர் மரபிலே பேரிகையாளன் மாநாய்கன் என்பான் ஒருவனிருந்தான். அவன் மகள் கண்ணகி என்னும் பெயரினள். அந் நகரத்திலே மாசாத்துவான் என்னும் மற்றொரு வணிகர் குலதிலகனும் இருந்தனன். அவன் குமாரன் கோவலன் என்னும் பெயரினன். கண்ணகி வளர்ந்து, கற்பால் அருந்ததியையும் பொற்பால் திருமகளையும் நிகர்த்து விளங்கினாள். கோவலன் அழகிற்சிறந்த ஆடவர் திலகனாய், நூல் பல பயின்று நுண்ணிய அறிவினனாய், வணிகத்துறையிலும் மற்றைய துறைகளிலும் தேர்ச்சிபெற்று, மிக்க புகழுடன் விளங்கினன். இவன் பளிங்குபோன்ற களங்கமற்ற உள்ளமுடையவன்; பிறர் கூறுகின்றவற்றை யெல்லாம் மெய்யென்றே கருதும் தூயகுணமுடையவன்; தருமமும் தண்ணளியும் மிகுந்தவன். இத்தகைய கோவலனுக்குப் பதினாறாண்டும் கண்ணகிக்குப் பன்னீராண்டும் நடவாநிற்கையில்,

அவர்தம் பெற்றோர், அவர்களது திருமணத்தைப்பற்றிப் பேசி, முடிவிட்டுத் தம்மக்கட்கு மணமென்று ஊரார்க்கு அறிவித்தனர். பின், வயிரமணித் தூண்கள் நிரை நிரையாகப் பொருந்திய மண்டபத்தில், நீலப்பட்டு மேற்கட்டியின்கீழ் நிறுத்தின முத்துப்பந்தரில், உறவின் முறையார் சூழ்ந்திருக்க, இன்னிசை வாத்தியங்கள் இயம்ப, புரோகிதன் சடங்கு காட்டக் கோவலன் கண்ணகியை அங்கியங்கடவுள் சான்ருக மணந்தனன். உறவுமகளிர்கள் அட்டமங்கலம் ஏந்தி, மணமக்களிருவரையும், 'பல்லாண்டு வாழ்க!' என்று வாழ்த்தி, அரசனையும் வாழ்த்தினர்.

கோவலனும் கண்ணகியும், மலரும் அதன் நறுமணமும், அமிர்தும் அதன் தீஞ்சுவையும்போல உள்ளங் கலந்து, ஒருமித்து அன்புடன் இன்புற்று வாழும் நாளில், கோவலன் தாயாகிய பெருமனைக்கிழத்தி என்பவள், தன் மகனும் மருகியும் சேர்ந்து இல்லறத்தைச் செவ்விதாக நடத்திக் கைதேர்ந்து உயர்ச்சி பெற்று விளங்குதலைக் காண விரும்பி, வேறொரு மாளிகை நிருமித்து, அதில் வேண்டும் பண்டங்களை நிரப்பி, ஏவலாளரையும் நியமித்து, அவர்களை அங்கு வாழும்படி செய்தனள். அவர்கள் அம்மாளிகையில் இருந்து இல்லறத்திற்குரிய அன்பும் அருளுமுடையவராய், இன்சொல் வழங்கி விருந்து போற்றியும், உத்தமர்க்கு உபகரித்தும், அந்தணரைப் பாதுகாத்தும், துறவிகளை எதிர் சென்று உபசரித்தும் இல்லறத்தை இனிதாக நடத்தி வந்தனர். இவ்வாறு சிலவாண்டுகள் கழிந்தன.

அந்நாளில் காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திராபதியென்பாள் ஒரு நாடகக் கணிகை இருந்தாள். அவள் மகள் மாதவி என்பவள். அவள் ஊர்வசியின் அமிசமாய்ப் பிறந்தவள்; அவள் ஐந்தாண்டில் ஆடல்

பாடல்களை ஆசிரியரிடத்துப் பயிலத் தொடங்கி, ஏழாண்டுவரை பயின்று, அவற்றில் மிக்க தேர்ச்சி பெற்று, அழகுடன் விளங்கிப் பன்னிரு பிராயம் அடைந்தாள். அவளது தேர்ச்சியைச் சோழன் கரிகாற்பெருவளத்தான் சபையில்ஆடலாசிரியனும்பாடலாசிரியனும் கூடி அரங்கேற்றுவித்தனர். அரங்கேற்றத்தைக் காணுமாறு அரசன் முதல் அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ற இருக்கைகளில் வந்து அமர்ந்தனர். மாதவி நாடகமேடையை அடைந்து, முதிய கணிகையர் தெய்வப்பாடல்கள் பாட, யாழ், குழல், மத்தளம் முதலிய இசைக்கருவிகள் அதனதன் வழி நின்று இன்னிசை எழுப்ப, பல வகைக் கூத்துக்களை உட்கருத்து வெளியிற் புலப்படும்படி அபிநயித்து நடித்துக் காட்டினாள். அரசன் கண்டு மகிழ்ந்து, மாதவியின் தகுதிக்கு ஏற்பத் தலைக்கோல் பட்டம் அளித்து, ஒரு பச்சை மாலையுடன் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னும் பரிசமாகக் கொடுத்தான்.

இவற்றைப்பெற்ற மாதவி, தன்னுடைய வீடு சென்று, ஒரு கூனியை அழைத்து, "இப்பச்சை மாலை ஆயிரத்தெண்கழஞ்சு பொன் பெறுவதாகும்; இவ்விலையைக் கொடுத்து இம்மாலையை வாங்கி அணிகின்றவர் எவரோ, அவரே மாதவிக்குக் கணவராதற்குத் தக்கோராவர்," என்று கூறும்படி சொல்லி, அவள் கையில் அம்மாலையைக் கொடுத்து, விலைக்கு விற்பார் தன்மையில் அவளை நகரின் பெருந்தெருவில் நிறுத்தினாள். மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு மகிழ்ந்து அவளை விரும்பியிருந்த கோவலன், ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னையும்கொடுத்து அம்மாலையை வாங்கி அணிந்துகொண்டு, கூனியுடன் மாதவியின் மனை புகுந்து, தன் மனையையும் மனைவியையும் மறந்து, அவளுடன் அளவளாவியிருந்து, அவளுக்குத் தன் செல்வமெல்லாவற்றையும் நாடோறும் கொடுத்

துக்கொண்டு, அங்கேயே வாழ்வாராயினான். கோவலனுக்கு மாதவி வயிற்றில் மணிமேகலை என ஒரு மகளும் பிறந்தாள். இக்காலத்தில் இவன் செய்த புண்ணிய தானங்களும், பிறர்க்குச் செய்த உபகாரங்களும் பல.

கண்ணகியோ, கவினழிந்து தனது ஆருயிர்க்காதலன் பிரிவினால் வருந்தி, அவ்வருத்தம் வெளியில் புலப்படாது மறைத்துக் கணவன் மீது சிறிதேனும் வெறுப்பின்றி, மாமன் மாமியருக்குச் செய்யவேண்டிய பணிகளை வழுவாது செய்துகொண்டிருந்தாள்.

## இந்திர விழா :

இவ்வாறு கோவலன் கண்ணகியைப்பிரிந்து மாதவியோடு மருவி வாழ்ந்து வருங்காலத்தில், புகார் நகரில் முன்பு அரசாண்ட தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன் முதலாகப் பல சோழர்களாற்பரம்பரையாய் நடத்தப்பெற்று வருவதாகிய இந்திர விழாவை நடத்தும் காலமாகிய சித்திராபௌர்ணமி வந்தது. அந்நாளில் பல சமயவாதிகளும் அரசன் அவையோரும் ஒருங்கு கூடி, "நாம் இந்திர விழாவை நடத்தாவிடின் முசுகுந்தனது துயரத்தைத் தீர்த்த நாளங்காடிப்பூதம் நகரமக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும்; பாவிகளைப்பாசத்தாற்கட்டிப்புடைத்துண்ணும் சதுக்க பூதம் நகரை விட்டு நீங்கிவிடும். ஆதலால், நாம் விழாவை வழக்கம்போல நடத்துவோமாக!" என்று பேசி முடிவிட்டார்கள். பின்னர் விழா நடக்கப்போவதை முரசறைந்து நகரினர்க்குத் தெரிவிக்குமாறு வள்ளுவனுக்குக்கட்டளையிட்டனர். அவன் வச்சிரக்கோட்டத்திலுள்ள மங்கலமுரசை எடுத்து யானைப் பிடர்த்தலை ஏற்றி, இந்திரனது வாகனமாகிய ஐராவதம்நிற்கும் கோவில்வாயிலிற்சென்று விழாவின் தொடக்கமும் முடிவும் சாற்றி, வீதியிற்

புகுந்தான்; புகுந்தவன், "மூதூர் வாழ்க! வானம் மும்மாரி பொழிக! மன்னவன் செங்கோல் தழைக்க! அறிவின் மிக்கோரே, பெரியோர்கள் இந்திரவிழா நடாத்தத் துணிந்துள்ளார்கள். இந்திரவிழா நடக்கும் காலத்தில் தேவர்கள் யாவரும் தங்கள் சுவர்க்கம் பொலிவிழக்கும்படி இங்கு எழுந்தருள்வார்களாதலால், வீதிகளில் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் நிரைநிரையாக நிரப்புங்கள்; குலைக்கமுகும் குலைவாழையும் கட்டும் இடங்களிற் கட்டுங்கள்; பத்தித் தூண்களில் முத்துத்தாமங்களை முறைமுறையாக நாற்றுங்கள்; விழா வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணல் மாற்றிப் புதுமணற் பரப்புங்கள், கொடிச்சீலை மகரதோரணங்களை மாடங்களிலும் வாயில்களிலும் சேர்த்து அலங்கரியுங்கள்; சிவபெருமான் முதல் சதுக்கபூதம் இறுதியாகிய தெய்வங்களுக்குச் சிறப்பும் பூசனையும் செய்யுங்கள். தருமோபதேசம் புரிபவர்கள் பந்தல்களிலும் அம்பலங்களிலும் நின்று பிரசங்கம் செய்யுங்கள். ஒட்டியசமயவாதிகள் பட்டிமண்டபங்களில் வாதம் புரியுங்கள்; யாருடனும் கோபமும் பகையும் கொள்ளாதிர்கள்," என்று முதலில் ஊரையும் அரசனையும் வாழ்த்தி, முரசை முழக்கி விழாவைச் சாற்றினன்.

அவ்வளவில் நகரம் அலங்கரிக்கப்பட்டது. ஊரார் பலவித வாத்தியம் முழங்கச் சடங்குகளுடன் கற்பகத்தரு நிற்குங் கோயிலில் ஐராவத உருவமெழுதிய கொடியை ஏற்றி, தண்ணிய காவிரியின் புண்ணியநீரைப் பொற்குடத்துக்கொணர்ந்து, "உரைசால் மன்னன் கொற்றம் கொள்க!" என வாழ்த்தி, இந்திரன் முடியில் திருமஞ்சனம் செய்தனர். சிவபெருமான் திருமால் பலதேவன் முதலிய தெய்வங்கட்கும்

விதி முறை வழுவாது விழாச் செய்தனர். நகரத்தார் விழாக் களிப்பால் விண்ணவரே போல வீறு பெற்று விளங்கினர்.

திருவிழாவுக்குக் கொடியேறிய நாள் முதல் இருபத்தெட்டு நாட்கள் விழா, பலவிதக்காட்சியுடன் நடைபெற்றது. விழா முடிவில் பௌர்ணமித் திதியன்று நகரத்தார் அனைவரும் தத்தம் பரிவாரங்களுடன் கடலாடுதற்கு வழக்கப்படி கடற்கரை சென்றார்கள். கண்ணகி கவலைக்கடலுள் மூழ்கிக் கிடந்தாள். விழாக்காலங்களில் பலரது முன்னிலையில் மாதவி, ஆடல்பாடல்களைச் செய்வது, கோவலனுக்கு வெறுப்பைத் தந்துகொண்டிருந்தது. இதனைக்குறிப்பாலறிந்த மாதவி, பல வகை உபாயங்களால் கோவலனைச் சமாதானம் செய்துகொண்டிருந்தவள், தானும் கடல் விளையாட்டைக் காணுதற்கு விரும்பினாள். கோவலன் அவளை அழைத்துக்கொண்டு விளையாட்டுமகளிருடன் வைகறையில்கடற்கரையை அடைந்து, தாழையே வேலியாகச்சூழ்ந்தஓரிடத்தின் நடுவிலிருந்த புன்னைமரத்தின் நிழலில் நல்ல மணற்பரப்பில் சித்திரத் திரையை வளைத்து, மேற்கட்டும் கட்டி, அதன்கீழ் இட்ட தந்தக்கட்டிலில்மாதவியுடன் இருந்தான். அதன் பின் மாதவி, பக்கத்தில் நின்ற வசந்தமாலை என்னும் தோழி கையிலிருந்த வீணையை வாங்கி, அதன் நரம்புகளை முறுக்கித் தனது மெல்லிய விரலால் தடவிச் சுரங்களை எழுப்பிச் செவியால் ஊன்றிக் கேட்டுணர்ந்து, யாழைத்திருத்தித் தான் வாசியாமல் கோவலன் கையில் கொடுத்தாள். கோவலன் அதனை வாங்கி ஆற்றுவரி, கானல் வரி என்கின்ற இசைப்பாட்டுக்களைக் கண்டத்தாற்பாடிக் கொண்டு வீணையை இனிமையாய் வாசித்தான்.

இங்ஙனம் கோவலன் பாடி வாசித்த பாட்டுக்களைக்கேட்ட மாதவி, அப்பாட்டுக்கள் அகப்பொருட்

சுவையுடையனவாயிருக்கக்கண்டு, "இவர் என்மேல் அன்பிலார்; வேறு மகளிரிடத்து அன்புள்ளார்," என்று தன்னுள் நினைத்து, தன் கோபத்தை வெளிக் காட்டாது, கோவலன் கையிலிருந்த வீணையை வாங்கித் தனக்கு வேறொரு எண்ணமில்லாவிடினும் தான் வேறு கருத்துடையவள் போலக் கோவலனுக்குத் தோன்றும்படி, பல வகையான வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வீணையை வாசித்தாள். அதனைக் கேட்ட கோவலன், "இவள் வேறொருவன்மேல் மனம் வைத்து இவ்விதம் பாடினாள்," என்று எண்ணி ஊழ் வசத்தால் மாதவிமீது வெறுப்புக்கொண்டு அவளை விட்டுப் பிரிந்து, ஏவலாளர் புடைசூழப்புறப் பட்டுத் தன் அகம் நோக்கிச்சென்றான். அதன்மேல் செய்வது இன்னதென்று அறியாது மயங்கி மாதவி யும், தோழிமார்களுடன் தன் இல்லம் சென்றாள்; சென்று கோவலனது பிரிவாற்றாது வருந்தி, கோவல னுக்குத் திருமுகம் போக்கக்கருதி ஒருதாழைமடலில் தனது பிரிவாற்றாமையைக் குறிப்பிட்டுப் பன்னிப் பன்னி எழுதி,அதனை வசந்தமாலைகையிற்கொடுத்து, "இதனைக் கோவலர்க்குக் காட்டி அழைத்து வருக," என்று அவளை அனுப்பினாள். வசந்தமாலையும்சென்று கோவலனைக் கூல வீதியிற்கண்டு, திருமுகத்தைக் கொடுக்க நெருங்கினாள். அவன் அதனை வாங்காது, "வசந்தமாலாய், பொய்யை மெய்யாகக் காட்டி யொழுகும்மாய்கைச்செய்கை, நாடகமகளாகிய மாத விக்கு இயற்கையன்றோ?" என்று வெறுத்துக்கூறி மறுத்துவிட்டான். வசந்தமாலை சென்று இதனைத் தெரிவிக்க, மாதவி கேட்டு வருந்தி, "கோவலர் என் மீது மாறாத அன்புள்ளவராகையால், மாலையில் வரு வார்; மாலையில் வாராராயினும், காலையில் வருவார்." என்றே சொல்லிக்கொண்டு, அவலநெஞ்சத்தோடு மஞ்சத்தில் படுத்தபடியே இமையோடு இமை பொருந்தாது கிடந்தாள்.

இவை இங்ஙனமாக, கண்ணகிக்குத் தேவந்தி என்னும் பார்ப்பனத்தோழி ஒருத்தியிருந்தாள். அவள் இளமையில் கண்ணகியின் தந்தை மாநாய்கன் மனையில் உடன் வளர்ந்தவள். அவள் கண்ணகிக்குக் கணவன் பிரிவால் நேர்ந்த துன்பத்தை உணர்ந்து வருந்தியவளாதலின், ஒருநாள் மிக்க வருத்தம்உடைய வளாய்த் தான் தினந்தோறும் சென்று வழிபட்டு வரும் பாசண்டச்சாத்தன் கோயிலுக்குச் சென்று, அறுகு, சிறுபூளைப்பூ, நெல் முதலியவற்றைத் தூவித் தொழுது, "கண்ணகி விரைவில் கணவனைப் பெறல் வேண்டும்!" எனப் பிரார்த்தித்துப் பின்பு கண்ணகியிடம் சென்று அவளை நோக்கி, "நீ உன் கணவரைப் பெறுவாயாக!" என்றாள்.

இதனைக்கேட்ட கண்ணகி, "தோழி, உன் ஆசி பொய்க்காது; நான் என் கணவரைப் பெறுவேன்; ஆயினும், நேற்றிரவு நான் கண்ட கனவினால், என் நெஞ்சம் ஐயமுறுகின்றது! அதனைக்கேள்: கனவின் கண் கணவர் என் கையைப்பற்றி இவ்வூரை விட்டு அழைத்துப்போக, யாங்கள் ஒரு பெரிய நகரில் புகுந்தோம்; அங்ஙனம் புகுந்த நகரிடத்தில் எங்கட்கு ஏலாத தொரு படிற்றுரையை (பொய்ப்பழிச் சொல்லை) இடுதேள் இடுமாறுபோல, (பொய்த்தேளை மேலே வைத்தல்) அவ்வூரார் எம்மேல் இட்டனர்; அப்பழியால் கோவலர்க்கு ஒரு தீங்கு நேர்ந்ததென்று சிலர் சொல்லக்கேட்டு, அதுபொறாமல், ஆண்மக்கள் முன்னர்ச் செல்லாதேன், அவ்வூர் அரசன் முன் சென்று, வழக்குரைத்தேன். ஆதலால், அவ்வரசனோடு அவ்வூர்க்கும் உற்றதோர் தீங்குண்டு; பின்னர் நிகழ்ந்த கன . தீக்கனவாதலின், அதனை உனக்கு

யான் விரித்துரையேன்; கடைசியாக நான் என் கணவரோடு பெற்றநற்செய்தியை நீ கேட்பாயாயின், அது நம்புந்தன்மையது அன்றாகலின், உனக்கு நகையைத்தரும்," என்று கனாத்திறம் கூறினாள்.

அப்பால் தேவந்தி கூறுவாள், "கண்ணகி, நீ கண்ட கனாத் தீயதென்று நினைந்து வருந்தவேண்டா; நீ கணவரால் வெறுக்கப்பட்டவளும் அல்லை; நீ முற் பிறப்பிற் கணவர்பொருட்டுச் செய்யவேண்டிய ஒரு நோன்பு தவறினை; அதனாலேயே இத்துன்பம்வந்தது. இதுதீரும் பரிகாரம் ஒன்றுண்டு:காவிரி நதிகடலோடு கலக்கும் துறையில் நெய்தற்கானலிடத்தில் சோம குண்டம் சூரிய குண்டம் என்னும் இரண்டு தடாக முள்ளன; அத்தடாகங்களில் மூழ்கிக் காமவேள் கோட்டத்தில் (மன்மதன் கோவில்)புகுந்து அத்தெய் வத்தை வழிபடுவோர், இப்பிறப்பில் நாளெல்லாம் தம் கணவரோடு பிரிவின்றியிருந்து இவ்வுலகத்தில் இன்பமுறுவர்; மறுமையிலும் தம் கணவரோடு உறைந்து மகிழ்ந்து வாழ்வர்; ஆதலால், நாமும் ஒரு நாள் அத்தடாகத்தில் மூழ்கி அத்தெய்வத்தைத் தொழுவோம்," என்று கூறினாள். அவள் கூறிய வற்றைக் கேட்ட கண்ணகி தேவி, "அவ்விதம் புண் ணிய தீர்த்தங்களில் மூழ்கித் தெய்வந்தொழுதல் நற்குடியிற்பிறந்த கற்புடை நங்கையர்க்கு இயல் பன்று; 'குலமகட்குக் கொண்டானிற் சிறந்த தெய் வம் வேறில்லை,' என்ற நீதி நீ அறிந்ததன்றோ?" என்று சொன்னாள்.

இவ்வளவில் மாலைப்பொழுது வந்தது. வீடு தோறும் மனையாட்டியர் மணி விளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை முல்லை மலரும் நெல்லும் தூவி வணங்கித் தங்களைக் கோலஞ் செய்து கொண்டனர். அப்போது கண்ணகியின் தாதி, அவ

ளிடம் அணுகி, "கோவலர் நமது தலை வாயிலில் வந்துள்ளார்," என்றனள். அவ்வளவிலே கோவலன் உட்புகுந்தான். கண்ணகி தொழுதாள். கண்ணகியுடன் அவன் பள்ளியறையுட்சென்று, அவளது வாடிய மேனியையும் நெஞ்சின் வருத்தத்தையுங் கண்டு வருந்தி, "எல்லோரிடத்தும் பொய்யை மெய்யாகக் காட்டியொழுகும் மாயப்பரத்தையோடு மருவி வாழ்ந்த காரணத்தால், நம் முன்னோர் நெடுங்காலமாய்த் தேடிவைத்த மிகுந்த செல்வத்தையெல்லாம் தொலைத்து வறுமையுற்றேன்; இவ்வறுமை, எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது," என்முன். கண்ணகி, "மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமைபற்றியே இங்ஙனம் தளர்ந்து கூறுகின்றீர்," எனக் கருதிப் புன்முறுவல் பூத்து, கோவலனை வணங்கி, "என்னிடம் இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன; அவற்றை எடுத்துக்கொள்க," என்று சொன்னாள். அதற்குக் கோவலன், "நீ சொன்ன இச்சிலம்பை நான் வாணிப முதலாகக்கொண்டு, மதுரை சென்று, இதுகாறும் அழித்த அணிகலன்களையும் பொருள்களையும் ஈட்டக் கருதுகின்றேன்; கண்ணகி, நீயும் என்னுடன் புறப்பட்டு வைகறையில் வருதல் வேண்டும்," எனக் கூறினான். கண்ணகியும் உவப்புடன் உடன்பட்டிருந்தனள்.

### வழிச் செலவு:

தீவினை செலுத்துதலால் இடையாமம் கழிந்து வைகறைப் பொழுதில், கோவலனும் கண்ணகியும் எழுந்து, காவலர் அறியாது இடைகழி வாயிலைக் கடந்து புறப்பட்டனர். புறப்பட்டவர்கள், திருமால் கோயிலை அடைந்து, வலஞ்செய்து தொழுது, புத்த விகாரங்களையும், அருகன் கோவில் சிலாதலங்களையும் வணங்கி, நகரின் பெருவாயிலையுங் கடந்து, இலவந்திகை மதிலுக்குப் புறத்திற்சென்று, காவிரியின் வடகரைச் சோலை வழியாக மேற்கு நோக்கி ஒரு காத

தூரம் போய், ஒரு குளிர்ந்தசோலையை அடைந்தனர். அவ்வளவிலே கண்ணகி தேவி, நடையினால் மிகத் தளர்ந்து, "மதுரை மூதூர் யாது?" என வினவினாள். அது கேட்டுக் கண்ணகியின் தளர்ச்சிக்குத் துன்பங்கொண்ட கோவலன், வருத்தத்தை மறைப்பதற்கு நகை காட்டி, "நமது நாட்டிற்கு அவ்வூர் ஆறைந்து காதத்தில் உள்ளது; இனி அணித்தே," என்று இரு பொருள்படச் சொன்னான்.

கோவலனும் கண்ணகியும் சிறிதுநேரம் இளைப்பாறியபின்னர்ப் பக்கத்திலுள்ளதவப்பள்ளியிலிருந்த கவுந்தி என்னும் பெயருடைய ஒரு முதிர்ந்த சைன சந்நியாசினியைக்கண்டு, அடிதொழுதனர். அம்முதியவளாகிய கவுந்தி, இருவரையும் நோக்கி, "நீங்கள் சிறந்த அழகும், நற்குடிப்பிறப்பும், நல்லொழுக்கமும் உடையவர்களாய்க் காணப்படுகின்றீர்கள். நீங்கள் தீவினையாளரைப்போல உங்கள் இருப்பிடம் விட்டுப் பெயர்ந்து, இங்கு வந்த காரணம் யாதோ?" என்று கேட்டாள். அதற்குக் கோவலன், "சுவாமி, நான் மதுரைமாநகரம் சென்று, நியாய வழியில் பொருள்தேட விரும்பினேன்; இதுவே இங்கு வருதற்குக் காரணம்," என்று சொன்னான்.

கவுந்தியடிகள் அதனைக்கேட்டு, "நன்று! இப்போது செல்லுதற்கிருக்கும் வழியோ, காடுகளை இடை இடையே கொண்ட நாடு. வழியில் பருக்கைக் கற்கள் படர்ந்து கிடக்கும். இவளது அனிச்சமலரினும் மெல்லிய அடிகள் அவற்றில் எவ்விதம் நடக்கப் பொறுக்கும்? என் செய்வது? ஊழின் வலியை வெல்வார் யார்? யான் பெரியோர்களிடம் அறவுரை (தருமோபதேசம்) கேட்பதற்கு மதுரை செல்ல எண்ணியிருக்கிறேன்; ஆதலின், நானும் உங்களுடன் வருகின்றேன், வாருங்கள்," என்றாள். அது கேட்டுக் கோவலன், கண்ணகியின் வருத்தமாற்றுதற்குஒரு

பெண் துணை கிடைத்ததே என்று மிகவும் மகிழ்ந் தான்.

கவுந்தி, செல்லும் வழிகளின் இயற்கையைக் கூறத் தொடங்கி, "கோவல, நாம் இனிச் செல்ல வேண்டிய இடத்துக்கு வழி வயலும், தோட்டமும், சோலையுமான வழியேயன்றி, வேறு வழியில்லை. வெயிலைக் கண்ணுற்பார்க்கவும் முடியாத இம்மெல் லியலாளை அழைத்துக்கொண்டு சோலைகளினூடே நிழல் வழியாகச் செல்லக்கருதினல் அவ்விடங்களில் வள்ளிக்கிழங்கை அகழ்ந்தெடுத்த குழிகளில் சண்பக மரங்களின் வாடற்பூக்கள் சேர்ந்துபொய்க்குழி படுத் தியிருக்கும். அவ்விடங்களை அறிந்து பாதுகாவலு டன் செல்லாவிடின், ஆபத்து உண்டாகும். அது பற்றித் தரைநோக்கி ஒதுங்கி நடந்தால், பலாப்பழங் கள் தலையிலும் முதுகிலும் முட்டும்; தோட்டங் களின் வழியாகச் சென்றால், பலாச்சுளைகளிலுள்ள விதைகள் காலில் உறுத்தும். இங்ஙனம் சோலையும் தோட்டமுமாகிய கரை வழியன்றி வயல்வழியாகப் போவோமாயின், குளங்களில் மீன் இரை தேரும் நீர் நாய்கள் தாவக்காணினும், சேல் மீன்கள் உகளக் காணினும், வாளை பாயக்காணினும், மலங்கு மிளிரக் காணினும், இவள் கலங்குவாள்; சோலைகளிலுள்ள தேனிறால் உடைந்து ஒழுகி வரும் தேன்கலந்த நீரை இவள் குடங்கையால் முகந்து பருகவும் கூடும்; வரம் பின் மேலிட்ட குவளைப்பூக்களில் படிந்துள்ள வண்டு களில் நீங்கள் அடியிடவுங் கூடும். இவ்வழிகளை யெல்லாம்விட்டு, பெருவாய்க்காலின் அடைகரை வழி யாகச் சென்றலோவெனின், அங்குள்ள நண்டும் நத் தையும் நம் அடியால் நோயுறுமாயின், அக்கொலைப் பாவம் நம்மால் தாங்கவும் ஒண்ணாது. ஆதலால், இவற்றையெல்லாம் பாதுகாத்து நீ உன் மனைவியுடன் கவனத்தோடு நடக்கவேண்டும்," என்று கூறித் தனது

மூட்டையையும் மயிற்பீலியையும் தூக்கி அவர்களு டன் புறப்பட்டாள்.

அவர்கள் செல்லுகின்ற வழியில், காவிரியின் நீர், வாய்த்தலைக் கதவின் மீதெழுந்து குதிக்கும் ஓசையும், செந்நெல்லும் கரும்பும் வளர்ந்த கழனிகளின் அருகிலுள்ள நீர் நிலைகளில்

'கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்'

ஆகிய நீர்ப்பறவைகள் கூடியிருந்து ஒலிக்கும் ஓசையும், பொன்னேர் பூட்டி நிலத்தை உழுவார் பாடும் ஏர்மங்கலப்பாட்டின் ஓசையும், நாற்று நடும் கடைசியர்கள் குரவை ஒலியும், களத்தின்கண் நெற்பொலி செய்வார் பாடும் முகவைப் பாட்டோசையுமான பலவித ஓசைகளையும் கேட்டு இன்புற்று வழி வருத்தந் தோன்றாமல், காவிரிக்கரை வழியாக நாளொன்றுக்குக் காதவழி நடந்து சீரங்கம் என்னும் திருப்பதியை அடைந்தனர். அங்கு அவர்கள் ஒரு சோலையிலிருக்கும் போது, அறமுரைக்கும் அருகசாரணர் இருவர் வந்து தோன்றினர்; அவர்களைக் கவுந்தி முதலியமூவரும் அடிவணங்கினர்; சாரணர் அவர்களுக்கு அறமுரைப்பக்கேட்டு, கவுந்தி அவர்களது அருண்மொழியைப் போற்றி, அருகதேவனைத் துதித்தாள். பின்பு சாரணர் செல்ல, மூவரும் ஓடமேறிக் காவிரியின் தென்கரையையடைந்து, ஒரு சோலையில் தங்கியிருந்தனர்; அப்பொழுது அங்கு வந்த வம்பப் பரத்தை ஒருத்தியும், வறுமொழியாடும் தூர்த்தன் ஒருவனும் கவுந்தியை அணுகி, "மதனும் இரதியும் போல்வார் இவர்கள் யாவர்?" எனக் கோவலனையும் கண்ணகியையும் குறித்து வினவினர். அதற்குக்

கவுந்தி, "இவர்கள் மதனும் இரதியும் அல்லர்; என் மக்களே; இவர்கள் வழி நடந்து வருத்த முற்றிருக்கின்றனர். இவர்கள் பக்கம் செல்லாது போய்விடுங்கள்," என்று கூறினள். அதனைக் கேட்ட அவர்கள் "தவத்தீர், ஒரு வயிற்றிற்பிறந்தோர் கணவனும் மனைவியுமாய்க் கூடி வாழ்தல் முறையென்று உங்கள் சாத்திரம் உரைக்கின்றதோ!" என்று பரிகசித்தனர். அவ்வளவில் கவுந்தி, "இவர்கள் முள்ளுடைக் காட்டில் முது நரியாக!" என அவர்களைச் சபித்தாள்.

'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.'

என்றபடி கயவராகிய அவ்விருவரும் உடனே நரிகளாய் ஊளையிட்டனர். இதனைக் கண்டகண்ணகியும் கோவலனும் மருண்டு இரக்கமுற்றுக் கவுந்தியைத் தொழுது,

"நெறியி லிங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறிதல் வேண்டும்."

இனி இவர்கள் சாபநீங்கி உய்தலான காலத்தை அடிகள் அருளவேண்டும்," எனப் பணிவுடன் வேண்டினர். அதற்குக் கவுந்தி, "இவர்கள் பெறுதற்கரிய மக்களுடம்பை ஒரு குறும்பு மொழியால் இழந்து, இழிபிறப்புற்றனர். ஓராண்டளவும் உறையூர் மதிற் புறத்துக் காவற்காட்டில் திரிந்து துன்பம உழந்த பின்னரே இவர்கள் முன்னை உருவம் பெறுவாராக!" எனச் சாபவிடை செய்தனள்.

தென்கரையிலுள்ள உறையூரில் அன்றிரவு உறைந்து, வைகறையில் தென்றிசை நோக்கிப் புறப்பட்டு, ஒரு சோலையிலுள்ள மண்டபத்தில் தங்கினார்கள். அம்மண்டபத்தில், குடகமலையின் அருகிலுள்ள மாங்காடு என்னும் ஊரிலிருந்து யாத்திரையாக

வந்த ஒரு முதுமறையோனைக் கண்ட கோவலன், "ஐயரே, இங்கு வந்த காரணம் என்ன?" என வினவினன். மறையவன், "நான் திருவரங்கப்பெருமானையும் திருவேங்கட நாராயணனையும் கண்டு வணங்கிக் கதிபெறும் விருப்பத்துடன் புறப்பட்டவன், பாண்டி நாட்டின் வளங்களையும், பாண்டியனுடைய செங்கோலையும் போய்க் கண்குளிரக் கண்டு வருகின்றேன். இங்ஙனம் வந்த நான், இங்கிருந்து சிறிது இளைப்பாறுகின்றேன்," என்றான்.

அவ்வளவில் கோவலன், "அப்படியாயின், மதுரைக்குச் செல்லுதற்குரிய செம்மையான வழியை எங்கட்கு விளக்கிச் சொல்லுக," என வேண்டினன். முதுமறையோன், "ஐயோ பாவம்! வெயிலின் கொடுமை மிக்க இந்தக் கோடைகாலத்தில் மெல்லியலான இப்பெண்மணியுடன் வந்தீர்கள். வழி வருத்தம் அதிகமாயிற்றே! பாறையும், பருக்கைக்கல்லும், வழி மயக்கமும், கானலும் மிகுந்த இந்தத் தொலையாத பாலை நிலவழியைத் தொலைத்துப்போய்க் கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரண்டூர்க்கும் பொதுவான ஏரியின் கரையை முதலில் அடைய வேண்டும்; பின்னர் அதினின்றும் சூலம்போலமூன்று வழி பிரிந்து செல்லும்; அம்மூன்று வழிகளில் வலப்பக்கம் செல்லும் வழியோ, வாகை, மூங்கில், கடம்பு முதலிய மரங்களும், கற்றாழை கரிந்துகிடக்கும் இடங்களுமாய் இருக்கும். அவற்றையெல்லாம் கடந்து சென்றால், மலைவாழை, கமுகு, தெங்கு, பலா முதலிய மரங்களும், பல கிழங்கு வகைகளும், தானிய வளங்களும் மிகுந்த தென்னவன் சிறுமலை தோன்றும், அம்மலையை வலப்பக்கத்து வைத்து இடப்பக்கத்து வழியிற்சென்றால், மதுரையை அடையலாம்.

"இடப்பக்கத்து வழியோ, குளங்களோடும் பூஞ்சோலைகளோடும் பாலை நிலங்கள் பல இடைக்கிடந்த

காட்டு வழியாய் இருக்கும்; அவ்வழியைக் கடந்தால், அழகர் மலை எதிர்ப்படும். அம்மலையின் பிலவழியில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்ற மூன்று பொய்கைகள் உண்டு. அவற்றில்மூழ்கு வோர், முறையே இலக்கண நூல் அறிவையும், பூர்வ ஜன்ம உணர்ச்சியையும், விரும்பியவற்றையும் பெறு வார்கள். அவற்றில் சென்று மூழ்க உங்களுக்கு விருப்பமில்லையெனில், அழகருடைய திருவடியை நினைந்து ஆலயத்தின் கருட ஸ்தம்பத்தையேனும் தரி சித்து, மனத்துள் இன்பங்கொண்டு, பின்பு நீங்கள் மதுரையை அடையுங்கள்.

"இடைப்பட்ட வழி செவ்விய வழியே. வழியில் சோலைகள்சூழ்ந்தஊர்கள்பலஉண்டு; இடையிடையே காடுகளும் உண்டு. இக்காட்டு வழியைக்கடந்து செல லுங்கால் ஓரிடத்து வனதெய்வம் ஒன்று உள்ளது; அது வருத்துந் தன்மையுடையது; முதலில், வழிப் போவாரை நயமாகப் பேசி வஞ்சித்துப்போகவிடாது தடுக்க முயலும். அதன் வசப்படாது தப்பிச் சென் றால், மதுரைக்குச் செல்லும் பெருவழியை அடைய லாம்; இம்மூன்று வழிகளுள் உமக்கு விருப்பமான வழியைப் பின்பற்றிச் செல்லுங்கள். நான் திருவரங் கப்பெருமானது சேவடி காணச் செல்கின்றேன்," என்று சொன்னான். இங்ஙனம் மறையவன் கூறிய தைக் கேட்ட கவுந்தியடிகள், "நான்மறையாளா, நீ கூறிய முப்பெரும்பொய்கைகளில் மூழ்கி அப்பயன் களை நாங்கள் அடையவேண்டா; ஐந்திர வியாகர ணத்தை எங்கள் அருக குமரன் அருளிச்செய்த பரம ஆகமத்திற்காணலாம்; முற்பிறப்பிற் செய்தவற்றை யெல்லாம் இப்பிறப்பின் அநுபவத்தால் அறியலாம்; வாய்மையும் கொல்லாவிரதமும் உடையவர், விரும்பி யனவெல்லாம் அடையலாம்; நீ வணங்க விரும்பிய தெய்வத்தைக் காணுதற்குச் செல்வாயாக; நாங்கள் எங்கட்கு ஏற்ற வழியே போகின்றோம்," என்று

சொல்ல, மூவரும் புறப்பட்டு அன்று அணித்தே யிருந்த ஓர் ஊரில் தங்கினர்.

மற்றைநாட்காலையில் அவர்கள் அந்தணன் சொன்ன வழி மூன்றனுள் நடுவழியைப்பற்றிப் புறப் பட்டுச் சென்றனர். செல்லுங்கால் வழி நடையால் கால் தளர்ந்து நீர் வேட்கையுற்று ஓரிடத்துத் தங்கி னர். கோவலன், தண்ணீர் கொண்டு வர, ஒரு தடா கத்தைக் கண்டு அதன் துறையில் நின்றான். நிற்கும் பொழுது அக்கானகத்துத் தேவதை, மாதவியின் தோழியாகிய வசந்தமாலைபோல் வடிவங்கொண்டு கோவலனது அடியில் வீழ்ந்து வணங்கி, பொய்க்கண் ணீர் உகுத்து, "ஐய, மாதவி கொடுத்த ஓலையை நான் உம்மிடம் கொடுக்க நீர் மறுத்த செய்தியைப்பின்னர் அவளிடம் உரைத்தபோது அவள் 'நான் மாலை வெண் தோட்டில் எழுதிய ஓலைப் பாசுரத்தில் தவறு ஒரு சிறிதுமில்லை; நீ பேசிய சொற்களே கோவலர்க்குக் கோபமூட்டின போலும்! அதனாலன்றோ கோவலர் வாராது கொடுமை செய்துவிட்டார்?' என்று கூறி மயங்கி வீழ்ந்து பின்னை எழுந்து, 'கணிகையர் வாழ்க் கை கடையே போலும்!' என்று தன்னை வெறுத்துப் பேசிக் கண்ணீர் சொரிந்து, முத்து வடத்தை அறுத் தெறிந்து, ஒருநாளும் பிரியாத என்னைத் துரத்திவிட் டாள்; நீர் மதுரைக்குச் செல்வதை வழியில் எதிர்ப் பட்டோர் சொல்லக் கேட்டு, வணிகர் கூட்டத்தோடு இக்காட்டுவழி வந்து துயருழந்தேன்; இத்துயருழந்த அடியாளுக்கு என்ன நற்சொல் அருளுகின்றீர்?" என்று விநயமாகக் கேட்டது.

இவ்விதம் இயக்கியாகிய தெய்வம் நடித்துப் பேசியதைக் கேட்ட கோவலன், ஆராய்ந்து, "ஓ! மூன் வழிப்போவாரை மயக்கும் வனதெய்வம் இவ் வழியிலுள்ளதுஎன்றுமறையவன்சொன்னானன்றோ? அத்தெய்வமே போலும் இவள்! உண்மையை நன்கு

கத் தெளிய, அந்தரி மந்திரத்தை உருவிட்டுப் பார்க்கிறேன்," என்று அம்மந்திரத்தை உருவிட்டான். இதையறிந்து பயந்த வனதெய்வம், "ஐய, நான் வசந்தமாலையல்லேன்; இவ்வனத்தில் திரியும் இயக்கி; உன் மீது விருப்பங்கொண்டு இங்ஙனம் மயக்கக்கருதினேன்; நான் செய்த இப்பெரும்பிழையை நீ பொறுப்பதோடு கற்புடையதெய்வமாகிய கண்ணகிக்கும் மாதவத்தாட்டியாம் கவுந்தியடிகளுக்கும் தெரிவிக்காமலிருக்க வேண்டும்; அவர்கள் சாபம் என்றால் தாங்கவொண்ணாது," என்று இரந்து கேட்டுத் தன திருப்பிடம் சென்றது.

பின்பு கோவலன் ஒரு தாமரை இலையில் தண்ணீர் மொண்டுகொண்டு வந்து கண்ணகிக்குக் கொடுத்து விடாய் தணித்தான். சூரிய வெப்பம் கடுகுதலால், இனிச் செல்லுதல் முடியாதென்று கருதிக் கவுந்தியடிகள், இருவரையும் அழைத்துப் போய் அங்குள்ள ஐயைகோட்டம் (காளி கோயில்) அடைந்தாள். கண்ணகி மெய் வருந்தி அடிகள் கொப்புளங் கொண்டு தளர்நடையோடு பெருமூச்செறிதலால், அவர்கள் அன்று மேற்செல்லாராய்க் கோட்டத்திலேயே ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்தனர்.

அன்று தினம் வேடர்கள், கொற்றவைக்குப் புலியிட்டுத் திருவிழாச் செய்தார்கள். தேவராட்டி ஒருத்தி, ஆவேசங்கொண்டு, அடி பெயர்த்தாடினள். ஆடிய அவள், கண்ணகியை நோக்கி,

"கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

எனக் கண்ணகிக்கு இனி நிகழப் போகின்றவற்றைக் கூறினன். இங்ஙனம் தன்னைப் புகழ்ந்து கூறியதைப் பொருத கண்ணகி, 'இவன் தெய்வ மயக்கத்தால் இங்ஙனம் கூறினான்,' எனக் கருதி, நாணமுற்றுக் கணவனது பின் புறத்தே மறைந்து சிறுநகை செய்து நின்றாள்.

அப்பால் கோவலன் கவுந்தியைத் தொழுது, "பாண்டியனது செங்கோல் நலத்தால் இவ்வழியில் வனசரங்களாலும், ஜலசரங்களாலும் நமக்கு எவ்விதத் துன்பங்களும் உண்டாகா. இந்நாட்டில் நம்மை வருத்துவது இவ்வேனிற்காலத்து வெயில் ஒன்றே; கண்ணகி, பாவம்! வெயில் மெய்யிற் படப் பொறாள்! இவள் சீறடி பருக்கைக் கற்களில் படியப் பொறா. ஆதலால், இனி இரவில் வழி நடப்பதே நன்று," என்று விண்ணப்பித்தான். அதற்குக் கவுந்தி உடன்பட்டாள் சூரியன் மறைந்த பின், மூவரும் நிலாத் தோற்றத்தை எதிர் நோக்கி இருந்தனர்.

நிலா உதயமானவுடன், கோவலன் கண்ணகியைப் பார்த்து, "மிருகங்களின் முழக்கத்துக்கும் பறவைகளின் ஒலிகளுக்கும் அஞ்சாமல் வருக," என்று சொல்லி, அவள் கையைத் தன் தோளில் சேர்த்துச் சென்றான். இருவரும் கவுந்தியின் அறவுரைகளைக் கேட்டுக்கொண்டே வழி வருத்தமின்றிப் பொழுது புலரும் அளவும் நடந்து, ஒரு பார்ப்பனச் சேரியை அடைந்தனர். அங்குள்ள பார்ப்பனர்கள் தங்களுக்குரிய வேதம் ஓதுதலைத் தவிர்த்து வரிப்பாட்டைப் பாடிப் பொழுது போக்கும் இழிந்த ஒழுக்கமுடையவர்களாயிருந்தபடியால், அவர்களது ஊர்க்குட்செல்லாது பக்கத்தில் ஓரிடத்தில் கண்ணகியையும், கவுந்தி

யடிகளையும் இருக்கும்படி செய்து கோவலன் காலைக் கடன் கழித்தற்கு ஒரு பொய்கையை அடைந்தான்.

கோவலன் இங்ஙனம் பொய்கைக்கண் நிற்கும் போது, கண்ணகியோடு அவன் வேற்றூருக்குப்புறப் பட்ட செய்தி கேட்ட மாதவி துயர் கொண்டு எழுதிக்கொடுத்த ஓலையை வாங்கிக்கொண்டு புகாரினின்றும் புறப்பட்டுக் கோவலனைத் தேடித்திரியும் கௌசிகன் என்னும் மறையோனும் அப்பொய்கை வந்து சேர்ந்தனன்; கோவலன் வழி நடந்த வருத்தத்தாலும் மனைவியுடன் கானகம் வந்த கவற்சியாலும் உருவம் வேறுபட்டிருந்தபடியால், கௌசிகன் அவனைச் சந்தேகித்து ஓர் உபாயத்தால் இன்னானெனத் துணியக் கருதினான்; கருதியவன் கரையில் படர்ந்திருக்கும் மாதவியென்னும் மறுபெயருடைய குருக்கத்தி நிழலிற்போய் நின்று அதனை நோக்கி,

"கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலுநீ மாதவி!" என்று

இந்த மாதவியை அந்த மாதவியுடன் உவமித்துப்பேசி நின்றான். அது கேட்ட கோவலன் "ஐய! நீ கூறிய இக்கூற்றிற்குப் பொருள் யாதோ?" என்று வினவினான். உடனே கௌசிகன், "என் ஐயம் அகன்றது; கோவலனைக் கண்டேன்!' என உவகை பூத்து, அவனைக்கிட்டி, "சிரிய செல்வ, உனது பிரிவால் உன் தந்தையும் தாயும் அருமணியிழந்த நாகம்போலத் தவிக்கின்றார்கள்; சுற்றத்தார் யாவரும் உயிரிழந்த உடம்பு போலத் துயர்க்கடலுளுணர்வற்றுக் கிடக்கின்றனர்; உன் ஏவலாளர் யாவரும் உன்னைத் தேடித் திசை திசைக்குச் சென்றிருக்கின்றனர்; பூம்புகார் நகரம் முழுதும் இராமனைப்பிரிந்த அயோத்திபோலச் செய

லற்றுக் கிடக்கின்றது. உன் காதற்குரிய மாதவியோ, வசந்தமாலை மூலம் நீ திருமுகம் மறுத்தது முதல், மஞ்சத்தில் துஞ்சிறாளே போலக் கிடக்கின்றாள். இந்நிலையில் நான் மாதவியைப் பார்க்கச் சென்றேன். அவள் என்னை நோக்கி, 'உமது இணையடி தொழுதேன். இத்துயர் தீர்க்க,' என்று சொல்லி, அப்போதே ஒரு திருமுகம் எழுதி, 'என் கண்மணி போல்வாருக்குக் காட்டுக!' என்று என் கையிற்கொடுத்தாள். நான் அதனைக்கொண்டு திசையெல்லாம் தேடித்திரிந்தும் உன்னைக் காணாமல் பல இடங்களும் சுற்றி அலைந்தேன்," என்று சொல்லி, "அவ்வோலை இது" என நீட்டினான். அவ்வோலையின் மடிப்புறம் மாதவியின் புழுகு நெய் பூசிய கூந்தல் முத்திரையிட்ட மண்ணுடன் கூடியதாயிருந்தமையால், அதனைப் பிரித்துவிட மனமில்லாதவனாய்ப் பின்பு பிரித்துவாசித்தான். அதில் "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்," என்று தொடங்கி,

"வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும் :
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ(டு)
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது,
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும் :
பொய்தீர் காட்சிப் புரையோய் ! போற்றி !"

என்று எழுதியிருந்தது. கோவலன் அதனைக் கண்ணுற்று மனங்குழைந்தான்; "மாதவி யாதொரு பிழையும் செய்திலள்; இஃது என் தீவினைப் பயனே," என்று சொல்லித் தளர்ச்சி யொழிந்தான். பின் அவன் கௌசிகனை நோக்கி, "இவ்வோலையே என் தந்தையார்க்கு யானெழுதும் ஓலை போலவும் ஏற்ற சொற்களும் பொருளும் பொருந்திக் காணப்படுகின்றது; என் பெற்றோரைத் திசைநோக்கித் தொழுகின்றேன்;

நீ விரைந்து சென்று இவ்வோலையை அவர்கட்குக் காட்டி, என் பிரிவால் அவர்களுக்குற்ற தளர்ச்சியையும் துன்பத்தையும் நீக்குவாய்,'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, அப்பால் கவுந்தியும் கண்ணகியும் இருக்குமிடத்திற்கு வந்தான். பின்பு அவர்களுடன் புறப்பட்டு, இடைவழியிற்கண்ட பாணர்களோடு அளவளாவி, அவர்களது வீணையை வாங்கி வாசித்துக் கொண்டே வழி நடந்தான். நடந்தவன், அவர்களை நோக்கி, "மதுரை நகர்க்கு இவ்விடத்திலிருந்து இன்னும் எத்தனை காதம் உள்ளது?'' என்று கேட்டான். அதற்குப்பாணர்கள், "இனி நெடுந்தூரமன்று; அண்ணித்தே; புலவர் மனத்தோடு நகரின் பலவகைமணங்களையும் மொண்டுகொண்டு, மதுரைத்தென்றல் நம்முகத்தில் வந்து வீசுகின்றதுபார்" என்றனர். அன்று இரவு அவ்விடத்தில் தங்கி, நடு இராப்பொழுதில் புறப்பட்டு வையை ஆற்றின் கரையையடைந்து, "புனல்யாறு அன்று இது, பூம்புனல் ஆறு," என்று தொழுது, மூவரும் ஓடத்தில் ஏறி ஆற்றைக் கடந்து, தென்கரை சேர்ந்தார்கள். மதுரையை வலஞ்செய்துவந்து மதிற்புறத்தில் கீழ்த்திசை வாயிலுக்கு அருகிலுள்ள புறஞ்சேரியில் அருகமுனிவர் இருக்கையில் தங்கினார்கள்.

## கோவலன் மதுரை கண்டது:

செந்தமிழ் நாட்டின் இராசதானி எனப்படும் மதுரைமாநகரம் வழி வழியாகப் பாண்டியகுல மன்னர்கள் முடி சூடி வீற்றிருந்த பழைமையும் சிறப்பும் வாய்ந்தது பாண்டியர்கள் அரசர்க்குரிய அஞ்சாமையும் ஈகையும் அறிவும் ஆற்றலும் அறமும் மறமும் ஆகிய குணங்களிற் சிறந்தவர்கள். கண்ணகி காலத்தில் மதுரையில் ஆட்சி புரிந்த பாண்டியன் நெடுஞ்செழியன். அவன் மனைவி கோப்பெருந்தேவி என்று

சொல்லப்படும் அறக்கற்புடைய மாது. கூடலம்பதி எனக் கூறப்படும் அந்நகரின் நடுவில், சிவபெருமான் கோயிலும் அதனைச் சூழத் திருமால்கோயில், துர்க்கை கோயில், முருகவேள் கோயில் முதலிய தேவர்கோட்டங்களும், அரசன் மாளிகையும், அறவோர் பள்ளிகளும் பொலிவுற்று விளங்கும்; பல்வேறு வருணத்தார் வாழும் வீதிகளும், இரதவீதி, விழாவீதி முதலியனவும் ஒன்றன் பின் ஒன்றாகச் சூழ்ந்து விளங்கி அழகு செய்யும். முச்சந்தியும் நாற்சந்தியும், பலிபெறு மன்றுகளும் அங்கங்கே காணப்படும். நாளங்காடி, (பகற்காலத்துக் கடைவீதி) அல்லங்காடி (அந்திக் கடை) எனப்படும் கடைவீதிகளில், பல்வகை இரத்தினக்கடை பொன்கடைகளின் செல்வத்தாலும் புடைவைக் கடைகளின் அடைவாலும் கூலக் கடைகளின் கோலத்தாலும் இந்திரனுடைய அருங்கலச்செப்பைத் திறந்து வைத்தது போல விளங்கும்.

காலை முரசமும் மாலை முரசமும் வீரமுரசமும் கொடை முரசமும் ஒலிக்கும் ஓசையும், அந்தணர் வேதமோதும் ஓசையும், கூட்டில் அடைபட்ட புலி, கரடி, சிங்கம் முதலியவற்றின் முழக்கமும், மக்களின் பேச்சின் ஒலியும் சேர்ந்து ஒரே ஆரவாரமாய்க் கேட்கும்.

வான் அளாவ நகரின் நாற்புறத்தும் விளங்கும் மதிலும் கோபுரமும் மலையும் சிகரமும்போலத் தோன்றும். இதனைச் சூழ்ந்த அகழி, கடல் போல ஆழ்ந்து அகன்றிருக்கும். இம்மதிலுக்கு ஒருபுறத்து அகழாய் விளங்குவது வையைமாநதி. அந்நதியின் வளத்தால் அதன் கரையின் புறமெல்லாம் குரவமும், மகிழும், கோங்கும், கடம்பும் பூத்துப் பூந்துகில் போர்த்தது போலக் காணப்படும். மதிற்புறத்துள்ள புறஞ்சேரி,

ஏரியும் பண்ணையும் கழனியும் சூழ்ந்து, தபோதனர் பள்ளிகளுடன் விளங்கும்.

இப்புறஞ்சேரியில் முனிவர் பள்ளியுள் கவுந்தியுடன் தங்கிய கோவலன் கவுந்தியடிகளைக் கைதொழுது, "தவத்தீர், ஒழுக்கமுடைய விழுக்குடியிற் பிறந்தவர்கள் மகளிரோடு நீண்டவழி நடவார் என்று பெரியோர் கூறுவர்; அங்ஙனமாகவும் நான் என் மனைவி மிகுந்த துன்பமுறும்படி முன்பு கனவிலும் நினைந்தறியாத தேசத்தில் அருவழி நடந்து திரிந்து துன்பமுழந்து சிறுமையுற்றேனே! இத்துன்பம்யான் அடைதற்கு என்ன பாவம் செய்தேனோ! அடிகளே, இனி நான் வந்த காரியத்தைச் செய்தற்கு மதுரையினுட்சென்று அங்குள்ள வணிகர்க்கு என்னிலைமையைத் தெரிவித்து வரக் கருதுகிறேன்; தங்கள் பாதுகாப்பில் இருக்கும் இவட்கு இனி ஏதமும் உண்டோ? விடையருள்க" என்று விண்ணப்பித்துநின்றான். அது கேட்ட கவுந்தி, 'ஐய, கவலற்க. நீ முற்பிறப்பில் நல்வினையை மிகச் செய்து பின்பு சிறிது தீவினையும் செய்தாயாதலால் உன் சுற்றத்தாரையும் தந்தையின் செல்வத்தையும் விட்டுக்காதலியோடு தனித்துத்துயரடைந்தாய். தீவினை, தவறாது தன் பயனை ஊட்டுமாதலால் அதற்கு இரங்குதல் அறிவுடைமையாகாது. இத்தகைய துன்பமுற்றோர் முன்னரும் எத்தனையோ பேர் உண்டு. காதலியைக் கானகத்தே கைவிட்டு வருந்தியநளன், இராமன் முதலியோர் துன்பத்தினும் காதலியைப் பிரியாது வாழும் வாழ்க்கையைப்பெற்ற உன் துன்பம் பெரிதன்றே!" என்று சொல்லிக் கோவலனைத் தேற்றினாள்.

இவ்வாறு கவுந்தி அம்மையால் தேற்றப்பட்ட கோவலன் விடை பெற்று, வாளேந்திய யவனர்கள்

(Romans) காவல் புரியும் கோட்டை வாயிலைக் கடந்து, உள் நகரில் சென்று, பல்வேறிடங்களின் காட்சிகளைக் கண்கொள்ளாவகை கண்டுமகிழ்ந்தான். அம்மகிழ்ச்சி மிகுதியால் தாங்கள் அமருதற்கேற்ற இடந்தேடச் சென்றவன், அக்காரியத்தை மறந்து மீண்டு வந்து, புறஞ்சேரியிலுள்ள தபோதனர் இருக்கை புகுந்து, கவுந்தியடிகளிடம் மதுரையின் அழகினையும் பாண்டியன் கொற்றத்தையும் புகழ்ந்து கூறிக்கொண்டிருந்தான்.

இச்சமயததில், காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தென்மேற்குத்திசையில்சிறிது தூரத்திலுள்ள தலைச் செங்காடு என்னும் ஊரில் வாழ்பவனாகிய மாடலன் என்னும் மறையோன், பொதியமலையை வலங்கொண்டு குமரித்துறைத்தீர்த்தம் ஆடி மீண்டு வருகின்றவன்,. வழி வருத்தம் ஆறுவதற்குக் கவுந்தியடிகள் இருக்கும் முனிவர் பள்ளியில் வந்து சேர்ந்தான். அம்மறையவன், கோவலனது பழைய நண்பனாதலால், கோவலன் அவனை வணங்கினான். உடனே மாடலன், கோவலனையும் கண்ணகியையும் கண்டு திடுக்கிட்டு, "கோவல, மெல்லியலான இத்திருமகளுடன் நீ இங்கு வந்ததற்குக் காரணம் என்ன? உன் போல்வார்க்கும் இத்தகைய துன்பம் எய்துவதோ? முன்பு, உன்னால் காதலிக்கப்பட்ட மாதவி வயிற்றிற் பிறந்த மகளுக்கு, நீ மணிமேகலையெனப் பெயரிட்டு மங்கலங் கொண்டாடிய நாளில், நீ அள்ளி அள்ளிக் கொடுக்கும் சுவர்ண தானம் பெறுமாறு ஒரு மறையவன் மூப்பினால் முதுகு வளைந்து தளர்ச்சியினால் தண்டூன்றித் தள்ளாடி வருகையில், பாகனை மீறி ஓடி வந்த மதயானை, அக்கிழ மறையோனைக் கையால் வளைத்து எடுத்ததாக, அப்போது நீ யானையை அதட்டி அதன் கையிலகப்பட்ட மறையவனை விடுவித்துத் தந்தத்தைப்பற்றி ஏறி, பிடரில் அமர்ந்து அம்மதயானையை வலி தொலைத்தாய். அஃதன்றியும், பூம்புகார் நகரில் பார்ப்பனி ஒருத்தி, தான் வளர்த்தகீரிப்பிள்ளை

யையும் தன் பிள்ளையையும் வீட்டில் வைத்து வெளியிற் சென்றாளாக, அப்போது படுத்திருக்கும் பிள்ளையருகில் ஓர் அரவம் வருதலைக்கண்ட நகுலம் அதனைத் துணித்து, இரத்தம் பூசிய முகத்துடன் வாயிலில் வர, பார்ப்பனி தன் பிள்ளையையே அது கடித்துவருகின்றதென்று பதறி, கையிலிருந்த பாண்டத்தைக் கீரியின் தலையில் போடக் கீரி உடனே மாண்டது. இதனை அறிந்த அவன் கணவன், வந்த பாவத்துக்கு வருந்தி, கங்கையாடவட திசைநோக்கிப் புறப்பட்டான். புறப்பட்ட கணவனை மனைவி பின் பற்றிச் செல்ல, அவன், 'இனி, பாவியான உன் கையால் உணவு கொள்ளேன்,' என்று கடிந்துரைத்து, ஓரேட்டில் வடமொழி வாசகமொன்றை எழுதிக்கொடுத்து, இதனைக் கடனறிந்த மாந்தர் கையிற்கொடுக்க,' என்று சொல்லிப் போயினான். போகவே, பார்ப்பனி அவ்வோலையைக் கைக்கொண்டு வணிகர் வீதியிலும் பிற வீதியிலும், 'இவ் வேட்டை வாங்கி என் பாவம் தொலைத்துப் பயன் கொள்ளுங்கள்,' என்று கூறிச்சென்றாள். நீ அழைத்து அந்த ஏட்டை வாங்கி வாசித்து அவளைத்தேற்றி அவளது கொலைப் பாவம் தீர முறைப்படி தானங்களைப் புரிந்தாய். அஃதோடமையாது, அவள் கணவனையும் வரவழைத்து, அவர்கள் இன்புற்று வாழச் செய்து வேண்டிய செல்வத்தையும் அவர்கட்கு வழங்கினாய்.

"இன்னும், காவிரிப்பூம்பட்டினத்தில் பத்தினியொருத்தியை ஒழுக்கங் கெட்டாளென்று அறிவில்லான் ஒருவன் அவள் கணவனுக்குப் பொய்ச்சான்று கூறினான். அவ்வளவிலே, பொய்க்கரியாளரைப் புடைத்துத் தின்னும் சதுக்க பூதத்தின் கைப்பாசம் அவனைக்கட்டி இழுத்துச்செல்ல, அவன் தாய் தன் ஒரு மகனையும் இழப்பதற்கு ஆற்றாது அரற்றி அழுதாள். அதைக் கண்டு இரக்கங்கொண்ட நீ, அப்

பாசத்தில் புகுந்து, 'பூதநாதனே, உனக்கு உணவாக என்னுயிரைக்கொண்டு அந்த ஏழை உயிரை விடுக,' என இரந்தாய்; பூதம்,

'நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்புஈங் இல்லை.

'ஆதலால், நீ இங்ஙனம் வேண்டற்க' என்று சொல்லி, உன் முன்னே அவனைப் புடைத்துத் தின்ன, அதனைப் பொருத அவன் தாய்கொண்ட சோகத்தை நீ தவிர்த்து, அவள் சாகுமளவும் அவளைப் பசிப்பிணி தீர்த்துப் பாதுகாத்தாய்.

"இவ்வாறு நீ இப்பிறப்பில் பண்ணியவையெவ்லாம் புண்ணிய தானங்களாகிய நல்வினையாகவே யிருக்கவும், உனது இத்துன்பத்துக்குக் காரணம், முற்பிறப்பின் தீவினையே போலும்!" என்று கூறி இரங்கினான்.

அவனை நோக்கிக் கோவலன், "ஐயரே, நான் சொல்வதைக் கேளும்: ஒரு கீழ்மகனால், இந்நகரில் கண்ணகி துயரமுற நான் உடுத்திய ஆடை பிறரால் கவரப்பட்டு, ஓர் எருமைக்கடாவின்மீது ஏறவும், தவசிகள் பெறும் மோக்ஷத்தை இவளோடு நான் பெறவும், மணிமேகலையை மாதவி புத்ததேவரிடம் ஒப்புவிக்கவும் இன்றிரவு வைகறையில் ஓர் கனவு கண்டேன். அது விடியற்காலத்துக் கனவாகலின், தப்பாது பலிக்குமோ என அஞ்சுகின்றேன்!" என்றான். மாடலனும் கவுந்தியும் அதனைக்கேட்டு, "இத்தவப் பள்ளியில் இல்லறத்தோர் இருத்தல் பொருந்தாது. உன் தந்தையின் பெயர் சொன்னால் உன்னை உபசரிப்பார் பலர் இந்நகர வணிகருள் இருப்பர்; இன்று பொழுது மறையுமுன் மனைவியுடன் நீ மதுரை நகர்க்குள் சென்றுவிடு," என்றனள்.

அவ்வாறு கூறுங்கால் இடையர் குலத்திற் பிறந்தவளாகிய மாதரி என்னும் முதுமகள் ஆரியாங்கனை என்னும் தெய்வத்துக்குப்பாற்சோறுகொண்டுபோய் நிவேதித்து வழிபட்டு வருகின்றவள், கவுந்தியைக் கண்டு வந்து வணங்கினாள். அது கண்ட கவுந்தி, 'புனிதமான பசுவினங்களைக் காத்து, அவற்றின் பால் முதலிய பயனை யாவர்க்கும் அளித்து உபகரிக்கும் தருமகுணமுடைய இடையரது இல்வாழ்க்கையில் கொடுமை சிறிதுமில்லை; அஃதன்றியும், இம்மாதரி அழுக்காறு பொய்ம்மை முதலிய தீயகுணங்கள் இல்லாதவள்; அருள் மிகுந்தவள்; மேலும் வயது முதிர்ந்தவள்; இற்றைக்கு இந்த இடைக்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்தால் யாதொரு தீங்கும் அடையாது,' என்றெண்ணி, மாதரியை நோக்கிக் கூறுவாள் :

"இம்மங்கையின் கணவனது தந்தை பெயரைக் கேட்டால், இந்நகரத்து வணிகர், பெறுதற்கரிய பொருளைப் பெற்றதுபோல மகிழ்ந்து, நல்விருந்தாய் எதிர்கொண்டழைத்துத் தம் மனையில் வைத்துக் கொள்வர்; அவ்வண்ணம் அவர்கள் இவர்களை அழைத்துக்கொள்ளும் வரை, இம்மங்கையர்க்கரசியை உன்னிடம் அடைக்கலமாகத் தருகின்றேன். நீ இவளை நீராட்டி அலங்கரித்துத் தோழிகளும் செவிலித்தாயும் நற்றாயும் நீயேயாயிருந்து, இவளைத் தாங்குவாயாக; இதற்குமுன் இவள் பாதம் பூமியைக் கண்டறியாது; பாவம்! தன் கால்கள் வெயிலின் வெம்மையால் கொப்புளங்கொண்டிருக்கவும், அதற்கு வருந்தாது, தன் கணவன் வெயிலின் கொடுமையால் மெய்வருந்தியதற்கே மிகுந்த துயருற்று, நாவும் புலரும்படி வாடி, கணவன் துயரன்றித் தன் துயரென்று வேறு காணாத பத்தினி தேவி இவள்;

'இன்றுணை மகளிர்க்(கு) இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத் தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால் ;
வானம் பொய்யாது; வளம்பிழைப் பறியாது ;
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது;
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு.'

என்று பத்தினிப் பெண்டிர்களைப்பற்றிச் சொல்லும் நல்லோரது அறநூல் நீதி நீயறிந்ததன்றோ? தவசிகள் கொடுத்த அடைக்கலப் பொருள், அப்போது சிறிதாயினும், பின்பு மிக்க பேரின்பம் தரும். இதனை ஒரு வரலாற்றால் விளக்குகின்றேன்; கேள் :

"காவிரிப்பூம்பட்டினத்தில்முன்புஒருநாள்பிண்டி மர நிழலிலிட்ட சிலாதலத்தில் சாரணர் ஒருவர் அமர்ந்து சாவகர் (அருகரில் இல்லறத்தார்) சூழ்ந்து கேட்கத் தருமோபதேசம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது, பூமாலையும்பொன்னாபரணமும் அணிந்து அழகு மிகுந்த தோற்றத்தோடு, தேவன் ஒருவன் அங்கு வந்து தோன்றினான். அங்கிருந்து தருமம் கேட்டவர்கள், அவனது அழகிய தெய்வ வடிவத்தில் ஒரு கை குரங்கின் கையாய் இருப்பதைக் கண்டு வியப்புற்று, 'இவன் யார்? வரலாறென்ன?' எனச் சாரணரைக் கேட்டனர். அதற்குச் சாரணர், 'சபையோரே, கேளுங்கள்: எட்டிப் பட்டம் பெற்றபெருஞ் செல்வனான சாயலன் என்னும் வணிகன் ஒருவன் இந்நகரில் இருந்தனன். அவன் அகத்துக்கு ஒரு நாள் உண்டியருந்த வந்த ஒரு முனிவரை, வணிகன் மனைவி எதிர்சென்று உபசரித்தழைத்து வந்து உண்பித்தாள். அப்போது ஊரில் துரத்தப்பட்டு உணவு பெறாது வருந்தி வந்த ஒரு குரங்கு, சாயலன் மனையிற்புகுந்து,

முனிவர் உண்ட உணவின் எச்சிலை உண்டு, அவர் கை கழுவிய நீரைப் பருகிப் பசி தணிந்து, தனது நன்றியை முனிவர்க்குக் காட்டுவது போல, அவர் முகத்தைக் கனிவுடன் பார்த்துக்கொண்டிருந்தது. அதனைக் கண்டு இரக்கங்கொண்ட அம்முனிவர், சாயலன் மனைவியை நோக்கி, 'உத்தமியே, இதனைக்குரங்கென்று கருதாது உன் பிள்ளைகளிலொன்றாகப் பாது காத்து வருவாயாக,' என்று கூறிக் குரங்கை ஒப்பித்தார். அவளும் அந்நாள் முதல் அதனைப்பிள்ளையாகப் பாவித்து வளர்த்து இதற்கென்று தன் பொருளில் ஒரு பாகமும் ஒதுக்கி வைத்தாள். சின்னாளின் பின்னர்க் குரங்கு மரித்துவிட, சாயலன் மனைவி அதற்கென்று பிரித்து வைத்த பொருளையெல்லாம் 'இதற்கு இக் குரங்காம் இழிபிறப்பு ஒழிக,' என்று சொல்லித் தானம் செய்தாள். அத்தானப் பயனால் அக்குரங்கு மத்திம தேசத்தில் வாரணவாசி என்னும் நகரத்தில் உத்தரகௌத்தன் என்னும் அரசனுக்கு அறிவும் உருவும் திருவும் நிரம்பிய மகனாய்ப் பிறந்தது. பிறந்த மகன் பருவமுடையவனாய்த் திருமுடிகவித்து முப்பத்திரண்டு வருடம் செங்கோலோச்சி விளங்கி இறந்தான். இவன் அரசனாய் விளங்கிய காலத்துச் செய்த அரிய தானத்தின் பயனால் இத்தெய்வ யாக்கை பெற்றான். இவன் சாவக நோன்பிகளான உங்கட்கெல்லாம், 'சாயலன் மனைவி தானத்தின் பலனாலே நான் இத்தன்மையன் ஆனேன்,' என்பதனை அறிவிக்கவே இத்தேவ வடிவத்திற்கலந்த குரங்குக் கையுடன் வந்துள்ளான்,' என்று அவர்களுக்கு விளங்க உரைத்தான்,'' என்று கூறி, "மாதரி, நேரமாகின்றது. இவர்களை அழைத்துச் செல்,'' என்று வேண்டிக்கொண்டாள்.

மாதரி, மகிழ்ச்சியுடன் அதற்குடன்பட்டுக் கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக்கொண்டு,

3

கண்ணகியின் அழகைக் கண்டு வியந்த ஆயர் ஆய்ச்சிகள் சூழ மதில் வாயிலைக் கடந்து தன் மனைபுக்காள்; தன் இல்லத்தின் அருகில் புதிதாய்க் கட்டியதும் செம்மண் பூசிப் பந்தரோடு விளங்கியதுமான ஒரு சிறு வீட்டில் கோவலன் கண்ணகி இருவரையும் இருக்கச் செய்தாள்; பின்னர்க் கண்ணகியை நீராட்டி, அலங்கரித்துத் தன்மகள் ஐயை என்பாளைத் தொழிலாட்டியாகக் கொடுத்து, "கண்ணகி, ஒன்றற்கும் நீ கவலவேண்டா; இனி இவ்விடத்தில் உன் கணவர்க்குத் துன்பமுறுதலும் உண்டோ?" என்று இனிய மொழி பகர்ந்து, கண்ணகியைத் தேற்றினாள். அப்பால்மாதரியின் கட்டளைப்படி ஆய்ச்சிகள், உணவு சமைத்தற்குப் புது மட்கலங்களோடு பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டி, மாதுளங்காய், வாழைக்கனி, மாங்கனி, அவரை, துவரை, செந்நெல்லரிசி, பால், தயிர், நெய் முதலிய தூய உணவுப்பொருள்களைக் கண்ணகியிடம் கொண்டுவந்துகொடுத்தனர். ஐயை அடுப்பில் வைக்கோலால் தீ மூட்டினாள். கண்ணகி ஐயையுடன் உணவுப்பொருள்களை உண்ணுதற்கினியவாய்ப் பாகம் பெறச் சமைத்தாள். பின்பு கண்ணகி, கோவலனது அடிகளை நீரால் விளக்கி, அமுதுசெய்யவேண்டினாள். கோவலன் பனங்குருத்தோலையாற்செய்த தடுக்கில் உண்பதற்கு உட்கார்ந்தான். தேவி, தரையில் தண்ணீர் தெளித்து, ஈறு வாழைக்குருத்தை விரித்து இட்டு, அதில் வகை வகையாய உணவுகளை வட்டித்தாள். அவன் அறுசுவை உண்டியை விரும்பி இனிதாக உண்டான். பக்கத்தில் நின்ற ஐயையும், மாதரியும், "இந்த மதுரையில் இவ்வாயர்பாடியில் யாம் பெற்ற இந்நல்லமுதம் உண்கின்ற இந்த நம்பி, அந்த மதுரையில் அவ்வாயர்பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுதம் உண்ட பூவை வண்ணனாகிய கண்ணனோதான்! இவன் துயர் தீர்த்த இந்த நங்கை, காளிந்தி ஆற்றின்கண் மணிவண்ணனைத் துயர் தீர்த்த

நப்பின்னைப்பிராட்டியேதான்!' என்று கூறி உவகை பொங்கி, "இவர் காட்சி நம் கண்களில் அடங்கா!" எனப் புகழ்ந்துகொண்டனர்.

இவ்வாறு உண்டு, வாய் பூசி, நீர் பருகி அமர்ந்த கோவலனுக்குக் கண்ணகி, அடைக்காயும் வெற்றிலையும் கொடுத்து அருகில் நின்றாள். கோவலன், அவளை 'வருக' என்று தழுவிக்கொண்டு, 'வேடர் வழிப்பறிக்கும் பாலை வனத்தில் பருக்கைக் கற்களின்மீது அடியிட்டு நடப்பது கண்ணகிக்கு இயலுமோ!' என்று எமது தாய் தந்தையர் என்ன இடும்பை உற்றார்களோ! யாம் இவ்விதம் துயரம் அடைந்தது, கனவோ! நனவாயின், முன் செய்த தீவினைப்பயன் தானோ! உள்ளம் மறுகுதலால், இப்போது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாளெல்லாம் வீணரோடும் துஷ்டரோடும் கூடி, நல்வினை செய்ய மறந்து, பிறரைப் புறங்கூறி, வெடிசிரிப்புச் சிரித்து, நல்லொழுக்கங் கெட்டேன்; இனி எனக்கு நற்கதி உளதாகுமோ! பெற்றோர்க்குச் செய்யும் பணியை இழந்தேன்; உனக்கும் துன்பம் செய்தேன்; இவ்வழுவான ஒழுக்கம் இழுக்கமென்பதைச் சிறிதும் நினைந்திலேன். யான் இத்தன்மையனாகவும் 'மதுரைக்கு எழுக' என்றேனாக, அதற்கு முறையன்று என மறுக்காது உடனே உடன்பட்டு என்னோடு வந்தாய். பாவாய், என்ன காரியம் செய்தாய்! 'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானை அல்லால் அறியாக் குலக்கொடியே!" என்று இரங்கிக் கூறினான். அதற்குக் கண்ணகி, "நீர் என்னைப் பிரிந்தமையால் அறவோர்க்களித்தலும், அந்தணரைக் காத்தலும், விருந்து போற்றுதலுமாகிய இல்லறஒழுக்கத்தை இழந்திருந்த யான், உமது பிரிவினால் எனக்கு உண்டான வெறுப்பையும் துன்பத்தையும் புறத்தில் தோன்றாது நெஞ்சில் அடக்கி அதனை மறைக்க எப்போதும் முக

மலர்ச்சி காட்டி, ஒழுகினேன்; உம்முடைய தாயும் தந்தையும் அதனைக் குறிப்பாற்கண்டு, உள்ளத்தில் உதித்த அன்போடு கூடிய மொழிகளால் என்பொறுமையைப் பாராட்டி வருந்தினர்; அவர்கள் அங்ஙனம் வருந்துமாறு நீர் போற்றா ஒழுக்கத்தில் பொருந்தியிருந்தீர்; ஆயினும், உம்முடைய மொழியினைச் சிறிதும் மறுக்காத உள்ள வாழ்க்கையுடையேனாதலின், உமது கட்டளைப்படி உம்முடன் எழுந்து வந்தேன்; கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை அன்றோ?" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட மாத்திரத்தில் கோவலன், அழலில் இட்ட மெழுகென உருகி, "பாவம்! நீ தாய்தந்தை முதலிய சுற்றத்தாரையும் ஏவல்மகளிரையும்செவிலித்தாயரையும் தோழிகளையும்நீங்கிநாணம், மடம், அழகு, கற்பு என்னும் நான்கையும் அவர்க்கிடாகத் துணைக்கொண்டு என்னோடு வந்து, என் தனிமை களைந்தாய்;

'பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!

உன் சிலம்புகளுள் ஒன்றை நான் கொண்டு போய் விற்றுவருகின்றேன்; நான் வருந்துணையும் நீ தனிமையால் வருந்தாதொழிக," என்று சொல்லிக் கண்ணகியை மீண்டும் தழுவிக்கொண்டான். ஆய்ச்சியர் யாவரும் குரவை ஆடப் போயிருந்தமையால், அருகில் ஒருவருமின்றிக் கண்ணகி தனித்திருத்தலை நினைந்த கோவலன், மனம்வெதும்பிக் கண்ணீர் சொரிந்தான்; கண்ணகி அதனைக் காணின் மிக வருந்துவாளென்று எண்ணிக் கண்ணீரை அவள் காணாவண்ணம் மறைத்தான்; சிலம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, மாதரி

வீட்டினின்றும் புறப்பட்டான். கண்ணகியை விட்டுப் பிரியமாட்டாமையால் மனஞ்சுழன்று வருந்தி, நடக்க மாட்டாது நடந்து தெருவில் சென்றான். இவ்வாறு கோவலன் செல்லுகையில், அவனை ஓர் எருது பாய வந்தது. கோவலராயின், அதனைத் தீநிமித்தம் என்றறிந்துசெல்லாமல் மீள்வர். கோவலன் அதனை ஆராயாது, தாதெரு மன்றங்களைக் கடந்து, தனித்தெருவின் நடுவே போய்க் கடை வீதியை அடைந்தான்.

## கோவலன் கொலையுண்டது :

கோவலன் சிலம்பு விற்கக் கடை வீதியிற் செல்லுங்கால் உருக்குத் தட்டாரும் பணித்தட்டாருமாகிய தட்டார் பலர் தன் பின் வர, அரச வரிசையாகிய சட்டையை அணிந்து, கையில் பற்றுக்கோடிறு பிடித்து, ஒதுங்கி நடக்கும் பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்பட்டான். கோவலன் அவனைக் கண்டு, 'இவன் பாண்டியனால் பெயரும் வரிசையும் பெற்ற பொற்கொல்லன் போலும்!' எனக்கருதி, அவனை அணுகி, "அரசன் தேவி அணிதற்கேற்ற சிலம்பொன்று உள்ளது; அதனை நீ விலை மதிக்க வல்லையோ?" என்று கேட்டான். பொற்கொல்லன், "யான் மகளிருடைய அடிக்கலம் விலை மதித்தற்கு அறியேனாயினும், வேந்தர்க்கு முடிக்கலம் முதலியன சமைப்பேன்," என்று தன் வன்மையைவிநயத்தோடுவெளிப்படுத்திக்கோவலனைத்தொழுதுபுகழ்ந்தான், உடனே கோவலன், சிலம்பு பொதிந்திருந்த பொதி வாயை அவிழ்த்துக் காட்டினான். கால தூதனுய்க் கொல்ல வந்த கொல்லன், சிலம்பின் சித்திரத் தொழில் அருமைப்பாட்டையெல்லாம் கூர்ந்து பார்த்து, வஞ்சிக்க எண்ணங்கொண்டு, "ஐய, இவ் வுயர்ந்த விலைச்சிலம்பு, கோப்பெருந்தேவிக்கல்லது பிறர் வாங்குதற்கும்

அணிதற்கும் ஏற்றதன்று; இதனை அரசனுக்கு அறிவித்து வருமளவும் நீர் என் குடிசைக்கருகிலுள்ள அவ்விடத்தில் அமர்ந்திருப்," என்று வேண்டினான். கோவலனும் அங்ஙனமே அக்கசாலைப் பள்ளியின் மதிலினுள்ளே புகுந்திருந்தான். பொற்கொல்லன், "நான் முன்பு வஞ்சித்துக்கொண்ட அரசியின் சிலம்பு என்னிடத்தே உள்ளது என்று பலரும் அறிய அரசனுக்கு வெளிப்படு முன்னமே, அச்சிலம்போடொத்த இச்சிலம்பைக்கொண்டு வந்த அயலூரான்மீது இடுவந்தியிட்டு (பொய்ப்பழி ஏற்றி), என்மீது உண்டாகும் ஐயத்தை நீக்கிக்கொள்வேன்!" என்று துணிந்து, அரண்மனை நோக்கிச் சென்றான்.

அச்சமயத்தில் பாண்டியன், தன் மனைவி கொண்டுள்ள ஊடலை நீக்கும்பொருட்டு, மந்திரிகளை நீங்கித் தனியாக மனைவியிருக்கும் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். பொற்கொல்லன் அச்சமயத்தில் அரசனைக் கண்டு வணங்கி, "அரசர்பிரானே, கன்னக்கோலும் கவைக்கோலும் இல்லாமலே நித்திரை மந்திரத்தால் காவலாளரை மயக்கி, அரண்மனையிலிருந்த சிலம்பைக் கவர்ந்துகொண்டகள்வன், இப்போது அதனை விற்பதற்கு ஊர்காவலர் கண்ணைக் கட்டி, மறைந்து வந்து, அடியேனுடைய சிறுகுடிலகத்துத் தங்கியிருக்கின்றான்; அதனை விண்ணப்பிக்கவே இங்கு வந்தேன்," என்றான். அரசியின் ஊடலால் அறிவு மயக்கமுற்றிருந்த பாண்டியன், காவலாளரை அழைத்து. 'அரசியின் சிலப்பு இவன் சொன்ன கள்வன் கையிலிருப்பின், அவனைக் கொல்ல, சிலம்போடு இங்குக் கொண்டு வருக!" என்று சொல்லக் கருதியவன், வினை விளைவு பலிக்குங் காலம் கிட்டியமையால் அது மறந்து ஆராயாது, "அவனைக்கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக!" என்று கட்டளையிட்டுச் சென்றான்.

பொற்கொல்லன், தான் எண்ணிய எண்ணம் முடிந்ததென்று தனக்குள் மகிழ்ந்து, காவலாளருடன் தீவினைவலையில் அகப்பட்டிருந்த கோவலன் இருக்குமிடத்தை விரைவில் வந்தடைந்தான். பின்பு அவன், கோவலனுக்குக் காவலாளிகளைக் காட்டி, "இவர்கள் வேந்தன் விருப்பப்படி சிலம்பு பார்க்க வந்தவர்கள்." என்று சொல்லிச் சிலம்பைக்காட்டுவித்துக்காவலாளிகளைத் தனித்தழைத்துச் சிலம்பின் அருமைபெருமைகளைக் கூறுவான்போல "இவன்வைத்திருக்கும்சிலம்பு தேவியின் சிலம்பு என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆகையால், நீங்கள் வந்த காரியத்தைவிரைந்து செய்யுங்கள்," என்று தூண்டினான். கொல்லன் வார்த்தைகளைக்கேட்ட அவர்கள், கோவலனது முகத்தின் அழகையும் உடல் இலக்கணத்தையும் சாந்தமான குணத்தையும் அவன் இருந்த இருப்பையும் உற்று நோக்கி, "இவன் கள்வன் அல்லன்; இவனைக்கொல்லுதல் அந்தோ! பெரும்பாவம்!" என்றனர். கொல்லன் அவர்களைப் பார்த்து வஞ்சகநகை நகைத்து, அவர்கள் மனம் உடன்படும்படி களவு நூலின் துறைகளையெல்லாம் எடுத்துக்கூறி, அவற்றில் பழகிய கள்வர் சாமர்த்தியங்களையும் விரித்துப் புலப்படுத்தி, தான் கூறியவையெல்லாம் உறுதி பெறுவதற்கு, நடவாத நிகழ்ச்சியொன்றை நடந்ததாகப் புனைந்து கூறத் தொடங்கினான்:

"வேலேந்திய வீரர்களே, திருடரின் திறமையை நீவிர் அறியீர் போலும்! நான் சொல்வதைக் கேளுங்கள்: பொல்லாத அந்தக்கள்வர்களுக்கு மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், ஆயுதம் ஆகிய இந்த எட்டுமே துணை. இந்தக் கள்வனை அரசன் ஆணைப்படி அழியாது இவனது மருந்து வசப்படுவீர்களாயின், அரசன் தண்டம் உங்களுக்குத் தவறாது. கள்வர் மந்திரத்தை அபிமந்திரிப்பாராயின்,

நாம் காணமுடியாவகை மாயமாய் மறைவர். தங்கள் தெய்வத்தைச் சிந்திப்பாராயின் கைப்பற்றியபொருளை நமக்குக் காட்டியும் தப்புவர். மருந்தினால் மயக்குவிப்பாராயின், நாம் இருந்த இடத்தைவிட்டுப் பெயரவும் முடியாது. தங்களுக்குச் சரியான சகுனம் வாய்த்தாலன்றி எப்படிப்பட்ட பெரிய பொருளும் கைப்படுவதாயிருந்தாலும் புறப்படவே மாட்டார். களவு நூல் தந்திரங்களைக் கொள்வாராயின், மண்ணுலகத்திலிருந்தே விண்ணுலகத்து இந்திரன் மார்பின் ஆரத்தையும் பெறுவர். இந்தப்பொருளைக்கைப்பற்றுதற்கு இதுவே இடமெனத்துணிந்து காலமும் கருதிக் கருவிகளையும் உபயோகித்துப் பொருள்களைக் கைப்பற்றுவாராயின், இவ்வுலகில் இவர்களைக்கண்டுபிடிக்கவல்லார் யாவர்? இவர்களுக்கு இரவென்றும் பகலென்றும் இல்லை. இவர்களுக்குத் தப்பி வாழ்தல் எவர்க்கும் ஆகாது.

"இன்னும் உண்மையாக நடந்தஒருசெய்தியைக் கேளுங்கள் : முன்னொருநாள் கள்வனொருவன் தூதர் உருவங்கொண்டு வந்து பகற்பொழுது அரண்மனை வாயிலில் தங்கியிருந்து, இராப்பொழுதில் மாதர் வடிவங்கொண்டு அரண்மனையுட்புகுந்து, நமது அரசனாகிய நெடுஞ்செழியன் தம்பி துயில் கொண்டிருக்கும் பள்ளியறையை அணுகினான். அணுகியவன், விளக்கு நிழலில் மறைந்து மஞ்சத்தருகிற்சென்று இளங்கோவின மார்பில்பிரகாசிக்கும் வைரமாலையைஎடுத்தான். உடனே இளங்கோ விழித்து, அவனை வெட்டுதற்கு உடைவாளை உறையினின்றும் உருவினான். கள்வன் உறையை விரைந்து வாங்கி, இளங்கோ குத்துந்தோறும் குத்துத் தன்மேற்படாது அவ்வுறையினுள்ளே செல்லும்படி உறையைச் செறித்தான். ஒன்றுங்கூற நாவெழாத அரசன் தம்பி, கள்வ

னுடன் மற்போர் தொடங்க, கள்வன் ஆங்கு நின்ற தூணைத் தானாகக் காட்டிக் களவுநூற்கல்வியால் தப்பினான். அவனை இந்நாள்வரை கண்டார் உண்டாயின், சொல்லுங்கள் பார்ப்போம்!'' என்று இவ்வாறு கூறி, ''இனிக் காலம் தாழ்க்காதீர்கள்'' என்றான்.

இவற்றைக் கேட்டு நின்ற காவலாளிகளுள் ஓர் இளைஞன், ''முன்னர் கூதிர்காலத்தில் ஒரு நாள் நள்ளிரவில் கன்னக்கோலோடு கரிய உடை தரித்து, கவ்விய ஊனை விடாத புலி போலக் கள்வன் ஒருவன் வந்து தோன்றினான். அப்போது காவல் செய்திருந்த நான் அவனை நெருங்கி என் வாளை உறையினின்றும் உருவினேன். இமைக்கு முன் அவன் வாளைப் பறித்தான்; அவனையும் என் வாளையும் இன்னமும் காணேன். ஆதலால், கள்வர் மாயம் எவர்க்கும் அறிதல் அரிது. பொற்கொல்லர் புகல்வது சாலவும் பொருத்தமுடையதே. இப்போது இவனைத் தப்பவிடின், அரசன் தண்டனை நமக்குத் தப்பாது. இனிச் செய்யத்தக்கதைத் துணிந்து சொல்லுங்கள்,'' என்றான்.

அவ்வளவில் காவலாளிகளுள்ளே கள்ளுண்டு நின்ற கொலையஞ்சாப் பேதை மகன் ஒருவன், தன் கூரிய வாளால் கோவலனை வெட்டினான். அதனால் அவன் குருதி வெள்ளம் பெருக, நிலமகள் 'அந்தோ!' என்று புலம்பி வருந்த, பாண்டியனது வளையாத செங்கோல் வளைய, கொல்லன் கொல்லனேயாகத் துண்டுபட்டு வீழ்ந்து உயிர் துறந்தான்.

> " கண்ணும் இருவினையும்; நண்ணுமின்கள் நல்லறமே;
> கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
> வளையாத செங்கோல் வளைந்ததே; பண்டை
> விளைவாகி வந்த வினை.''

### ஆய்ச்சியர் குரவை:

கோவலன் சிலம்பு விற்கப் புறப்படுவதற்கு முன்னரே விடியற்காலையில் தயிர் கடைவதற்கு மாதவி, தயிர்த்தாழி இருக்கும் இடத்திற்குச் சென்றாள் முதல் நாள் பிரையிட்ட பாலும் தோயாது திரைந்திருந்தது; உருகவைத்த வெண்ணெயும் உருகாதிருந்தது; அன்றியும், பசுக்கூட்டத்தில் காளைகள் கண்ணில் நீர் உகுத்து நின்றன; ஆட்டு மறிகள் துள்ளி விளையாடாமல் முடங்கிக் கிடந்தன; பசுக்களெல்லாம் உடல் நடுங்கிக் கதறி நின்றன; பசுக்களின் கழுத்து மணிகள் அறுந்து வீழ்ந்தன. இவற்றையெல்லாம் அவள் கண்டு, தன் மகள் ஐயையை நோக்கி, "நமக்கு ஏதோ ஒரு தீங்கு வருமென்று நினைக்கின்றேன்; ஆயினும், நீ அஞ்சவேண்டா; முன்னர் ஆயர்பாடியில் தாதெரு மன்றத்தில் கண்ணபிரான் தன் தமையன் பலராமனோடு ஆடிய பால சரித நாடகங்கள் பல உண்டு; அவற்றுள் நம் நப்பின்னையோடு அவன் ஆடிய குரவைக்கூத்தை, மண்ணின் மாதர்க்கு அணிகலமாகிய கண்ணகி காண, நாம் ஆடக்கடவோம்; இது இவ்வுற்பாதங்களுக்கு உபசாந்தியாகும்," என்று கூறி, ஆய்ச்சியர் எழுவரைத் தேர்ந்தெடுத்து, வட்டமாய் முறைப்படி நிறுத்திக் குரவைக்கூத்தை விதிப்படி ஆடும்படி செய்தாள். அவர்களும் முதலில்,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமே லவன்வாயில்
கொன்றைநந் தீங்குழல் கேளாமோ? தோழீ!"

என்றுமாயவனை முல்லைப்பண்ணாலே பாடினர். மாதரி அது கண்டு வியந்தாள். அப்பால் குரவையாடும் மகளிர்,

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே ;
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்."

என உள்வரி வாழ்த்தாகவும்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே !
நாராய ணாவென்னா நாவென்ன நாவே!"

எனப் படர்க்கைப் பரவலாகவும் பாடி, "நமது ஆவினம் பிணி நீங்க ! பாண்டியன் முரசம் பகைவரை வென்று முழங்க !" என வாழ்த்திக் குரவைக்கூத்தை ஆடி முடித்தனர்.

## கண்ணகி துன்பம் :

குரவை நாடகம் ஆடி முடிந்த பின்னர் மாதரி நீராடித் திருமால் அடியைப் பூசிப்பதற்கு வையையாற்றிற்குச் சென்றாள். அப்போது உள் நகரத்தில் கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட இடைச்சி ஒருத்தி, அதனைத் தெரிவிக்க விரைந்து வந்தாள் ; வந்தவள், கண்ணகியின் அழகையும் இளமையையுங் கண்டு அவளிடம் தன் வாக்கால் அதனைத் தெரிவிக்க நாவெழாது, குரவை ஆடி முடித்து நீராடிவந்த ஆயர் மகளிரிடம் இரகசியமாய்க் கூறி, அவர்களுடன் விம்மி நின்றாள். கண்ணகி இதனைக் கண்டு, அருகில் நின்ற ஐயையை அழைத்து, "தோழீ, என் காதலர் இன்னும் வரக்காணேன் ; அதனால் என் நெஞ்சம் வருந்தி மயங்குகின்றது ; இம்மாதரி யாவரும் மறைவாகப் பேசிக்கொள்வது யாதோ! தெரிந்திலேன் !" என்று

இரங்கிக் கூறினாள். செய்தி அறிந்து வந்த ஆய்ச்சி, "அந்தப்புரத்திலிருந்த சிலம்பை அபகரித்த கள்வன் கோவலனே என்று அவனைக் காவலர் கொலைசெய்து விட்டனராம்!" என்றனள். அந்தோ! அப்போது கண்ணகியடைந்த துன்பத்தை எண்ணவும்படுமோ! துயரம் பொங்கி எழுந்தாள்; கூந்தல் தாழ வீழ்ந்தாள்; தன் வசமிழந்தாள்; கண்கள் கலங்கிச் சிவக்கும்படி கையால் முகத்தில் அறைந்தழுதாள்; கொழுநனை விளித்து, "அந்தோ! நீர் எங்கிருக்கின்றீர்!" என்று பொருமிப் புலம்பினாள். இங்ஙனம் பலவாறு துயருழந்த கண்ணகி, பின்னர்க் குரவையாடின மகளிரை நோக்கி, "ஆயர் மகளிரே, நீங்கள் எல்லாம் கேளுங்கள்," என்று சொல்லிப் பின் சூரியனை நோக்கி,"செங்கதிர்ச் செல்வனே, இவ்வுலகிலுள்ள பொருள்களுள் நீ அறியாத பொருள் ஒன்றும் இல்லை; ஆதலால், நீ அறிய என் கணவர் கள்வரோ?" என்றாள். அப்போது சூரியன், அசரீரியாய், "நின் கணவனோ கள்வனல்லன்! அவனைக் கள்வன் என்ற இவ்வூரை மாதே, விரைவில் எரியுண்ணும்," என்றான்.

கண்ணகி மற்றைச் சிலம்பொன்றைக்கையிலேந்திக்கொண்டு, அந்த ஆயர்பாடியினின்றும் அங்ககருள்ளே சென்று, அங்குள்ள கற்புடை மகளிரை நோக்கி, "நீதியில்லாத அரசனிருக்கின்ற ஊரிலிருந்து வாழும் பத்தினிகளே, என் கணவர் கொண்டுவந்த சிலம்புக்கு இணையான மற்றைச் சிலம்பு இதோ என் கையிலிருக்கின்றது; உலகில் பிறந்தார் ஒருவரும் படாத துன்பம் யான் பட்டேன்; ஒருவரும் உறாத துயரம் யான் உற்றேன்; என் கணவர் கள்வனல்லர்; என் காற்சிலம்பு மிக்க விலை பெறுவதாதலால், அதனை அபகரித்துக்கொள்ளக் கருதி, அவரைக் கள்வனென்று பெயரிட்டுக் கொன்றார்களே! இஃது என்ன அநியாயம்! இம்மகளிர்க்கு முன்

என் கணவரைப் பண்டுபோலக் காண்பேனே! காண் பேனாயின் அஃது ஒருபுதுமையே; அவ்விதம் கண்டால் அவர் வாக்காற்சொல்லும் நல்லுரையைக் கேட்பே னே? கேட்பேனாகில் அஃது எனக்கோர் உறுதி. அங் ஙனம் அவருரைக்கும் உரையைக் கேளேனாயின், 'இவள் கள்வன் மனைவி,' என்று என்னை நீங்கள் யாவ ரும் இகழுங்கள்," என்று ஆற்றாது புலம்பிக் கூறு ரைத்தாள்.

இங்ஙனம் அழுகின்ற அவளை, மதுரைநகரத்தார் யாவருங்கண்டு, தேற்றும் வழி காணாது, தாமும் இரங்கி அழுது மயங்கி, "இனி இறக்குமளவும் நீங் காத துன்பத்தை இக்காரிகைக்கு உண்டாக்கியத னாலே, ஒருகாலும் கோடாத செங்கோல் கோடியது; இதனால்மேல் யாதுவிளையுமோ! பாண்டியனது அரசி யல் அழிந்தது; இதனால் இனி யாதாகுமோ! செம் பொற்சிலம்பொன்றைக் கையிலேந்தி நம்மைக்கெடுத் தற்பொருட்டுப் புதுமையான பெருந்தெய்வம் இங்கு வந்தது; இதனால் இனி யாது நேருமோ! இவள் மிக விம்மிவிம்மி வாய்விட்டு அரற்றுகின்றாள்; தெய்வம் ஏறினாள் போலும் தன்மையுடையவளாயிருக்கின் றாள்; இதனால் இனி யாது விளையுமோ!" என்று பல படியாகக் கூறி, கண்ணகியின் நிலைமைக்கு வருந் தினர்.

வேறு சிலர், கண்ணகியை அழைத்துச் சென்று வெட்டுண்டு பட்ட கோவலனைக் காட்டினர். அப் பொழுது மாலைப்பொழுது வந்தது. ஊரெல்லாம் ஒல் லென்னும் பூசல் உண்டாயது. காலையில் தன்னைத் தழு வித் தன் மாலையைக்கொடுத்து வந்த கணவன், மாலை யில் இரத்த வெள்ளத்தில் தன்னைப்பாராது பிண மாய்க் கிடக்கின்ற கடுந்துயரைக் கண்ட கண்ணகி,

"யாருமில் மருண்மாலை இடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ!
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுவென உரையாரோ!"

என்று பலவாறு அரற்றி அழுது, "இந்நகரத்தில் என்னைப்போல் பெண்பிறந்தார் இல்லையோ! சான்றோர்கள் இல்லையோ! தெய்வமில்லையோ! இவர்களிருப்பின் இவ்வநியாயம் பிறக்குமா!" என்று இன்னன சொல்லி அழுது, கணவனைத் தழுவிக்கொண்டாள். அவ்வளவிலே கோவலன் எழுந்து நின்று, "அந்தோ! உனது மதிபோலும்முகம்கன்றியதே!" என்று சொல்லிக் கையால் அவள்கண்ணீரைத்துடைத்தான். பின்னர்க் கண்ணகி, விம்மி அழுதுவீழ்ந்து, கணவனுடைய அடிகளைக் கையாற் பற்றிக்கொண்டாள். சுவர்க்கம் புகுவதற்கெழுந்த கோவலன், "கண்ணகி, நீ இருக்க," என்று சொல்லி, தேவர் குழாம் சூழ வானிற்போனான்.

கண்ணகி, "இங்ஙனம் என் கணவர் எழுந்து நின்றது மாயமோதான்! அன்றாயின், வேறு யாதாகும் இது! ஒரு வேளை என் மனத்தை மருட்டிய தெய்வமோ! தெரிகின்றிலேன்! ஆதலால், என் கணவரை எங்கும் போய் ஆராய்ந்து கூடுவேன்! அங்ஙனம் கூடுதலும் என் சினந் தணிந்தாலன்றிக் கூடேன்; என் சினம் தணிதற்பொருட்டு யான்சென்று அக்கொடிய வேந்தனைக்கண்டு, என் கணவரைக்கொன்ற இத்தீச்செய்கை யாதென்று கேட்பேன்," என்று தன் நெஞ்சோடு கூறினாள். அப்போது தன்னூரில்முன்புகண்ட தீக்கனா ஞாபகத்திற்கு வந்தது. அதனால், கண்ணீர் சோர நின்று, பின்பு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அரண்மனை வாயிலை நோக்கிச் சென்றாள்.

அப்போது பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி இளங்கோப்பெண்டு, தன் கணவனாகிய பாண்டியனது செங்கோலும் வெண்கொற்றக்குடையும் நிலத்தில்விழவும், ஆராய்ச்சிமணிக்குரல்அதிரவும், இரவில் வானவில் உண்டாகவும், பகலில் நக்ஷத்திரங்கள் உதிரவும், பூமி நடுங்கவும், கனவில் கண்டு, அவை தீக்கனாக்களென்று அஞ்சி, தோழியோடு அரசனிடம் வந்து, அக்கனாத்திறங்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் கண்ணகி கோபந் தணியாதவளாய் அரண்மனை வாயிலை அடைந்து, வாயில் காப்பவனை நோக்கி, "கணவனையிழந்தாள் ஒருத்தி கையிற்சிலம்பொன்றை ஏந்தி வந்து வாயிலில் காத்திருக்கின்றாளென்று உங்கள் அரசனிடம் அறிவி," என்றனன். அவன் அங்ஙனமே சென்று, "அரசர் பெரும, வாயிலில் ஒருத்தி வந்திருக்கின்றாள். அவள் கொற்றவையோ, பத்திரகாளியோ, பிடாரியோ என்று சொல்லத்தக்க கோபமுடையவளாய்க்காணப்படுகின்றாள். கணவனை இழந்தவளாம். கையில் சிலம்பொன்று பிடித்திருக்கின்றாள்" என்றுதெரிவித்தான். அரசன் "அவளை அனுப்புக" என்றான். அவனும் அங்ஙனமே கண்ணகியை அரசனிடம் செல்லவிட, அவள் சென்று அரசன் முன்னிலையில் நின்றாள்.

அரசன் கண்ணகியைக் கண்ணுற்று, "அம்மா, நீ ஏன் கண்ணீர்சொரிகின்றாய்? நீயார்?" என்றான். அதற்குக் கண்ணகி, "தேரா மன்ன, நான், ஒரு புறாவின் பொருட்டுத் தன் தசையை அரிந்து தராசில் வைத்த மன்னர்பிரானும், தன் மகனால் அறியாது கொல்லப்பட்ட ஒரு பசுக்கன்றின் காரணமாக அருமந்த குலத்துக்கு ஒரு மைந்தன் என்பதையும் பாராமல் தன் மைந்தன்மீது தேரைச்செலுத்திய மநுச்சோழனும் இருந்து அரசாண்ட புகார்நகரில் வாழ்வேன்; அந்நக

ரத்து மாசாத்துவானுர் புதல்வர் கோவலர் மனைவி; அவர் ஊழ்வினையால் உனது ஊரில் எனது காற்சிலம்பை விற்க வந்து, உன்னுற்கொலையுண்டார்; என் பெயர் கண்ணகி" என்று கூறினுள். அரசன் கேட்டுக் "கள்வனை அரசர் கொல்லல் கொலையாமோ? நீதிதானே?" என்ருன். கண்ணகி, "ஆராய்ந்து விசாரித்தறியாமல் கோவலருக்குக் கொலைத்தண்டம் விதித்தமையால் உனது நீதி முறைகெட்டது. என் சிலம்பின் அரி மாணிக்கம்; வேண்டுமாயின், சோதித்துப்பார்," என்ருள். அரசன், "இவளுரைத்தது நேர்மையான வார்த்தையே; என் தேவியின் சிலம்பின் அரி, முத்தே," என்று சொல்லி, இரண்டு சிலம்பையும் தருவித்துத் தன் முன்னரே வைத்தான். மாணிக்கப் பரலிருந்த கண்ணகி சிலம்பு, உடைந்து, பரல்கள் வெளிப்பட்டு, அரசனது கொலைத்தண்டம் விதித்த வாயைத் தண்டிப்பதுபோல வாயில்தெறித்தன. அதுகண்ட அரசன், "அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானே அரசன்! யானே கள்வன்! எனது அருமந்த திங்கள் மரபு என்னுல் களங்கமுற்றதே! என் ஆயுள் இன்றேடுமுடிக!" என்றுமயக்கமுற்று இருந்தவாறே சிம்மாசனத்தில் வீழ்ந்து உயிர் துறந்தான். உடனே கண்ணகி தன் கைச்சிலம்பை அரசன் தேவி முன்னே எறிந்தாள்.

அது கண்ட கோப்பெருந்தேவி, தன் கணவன் இறந்தானென்பதையும் அறியாது,கண்ணகியை ஆற்றிப் பொறுதி கேட்க நினைந்து, உடல் நடுநடுங்கி உள்ளம் பதைபதைத்து, "ஐயோ! தந்தை தாய் முதலியோரை இழந்தார்க்குஅம்முறை சொல்லிப்பிறரைக் காட்டித் தேற்றலாம்; கணவனை இழந்தார்க்குத்தேற்றும் வகை யாதுளது? இது பற்றியன்றே,

'மக்களிறந்த இடும்பையினும் மனையாளிறந்த
இடும்பையினும்
மிக்க இடும்பை ஓவாத விதவை இடும்பை'

என்று உலகம் கூறும்; என் செய்வேன்!" என்று சொல்லிக் 'காத்தருளவேண்டும்!' என்று ஓலமிட்டுக் கண்ணகியின் இணையடியில் தொழுது விழுந்தாள்.

பின்னர்க் கண்ணகி, 'தேவியே, நான் ஒன்றும் அறியேன். ஆயினும்,

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.'
'அல்லவை செய்தார்க்(கு) அறங்கூற்றம்'

என்ற ஆன்ேறார் வாக்குகள் பொய்க்குமோ? நான் பத்தினிகள் பிறந்த பதியில் பிறந்தவள்; நானும் உண்மைப் பத்தினியேயாகில், அரசனோடு இம்மதுரையையும் அழிப்பேன், பார்! நீ என் பட்டிமையும் காண்பாய்," என்று சபதஞ்செய்து, அவ்விடத்தை விட்டு நீங்கினாள். கண்ணகி கூறிய வீரமொழிகளை முற்றும் கேளாமுன்னரே, கோப்பெருந்தேவி, அரசன் இறந்தானென்று அறிந்ததும் உடன் உயிர் துறந்தாள்.

அப்பால் கண்ணகி, மதுரையிலுள்ள பெண்களையும், ஆடவர்களையும், தெய்வங்களையும், முனிவர்களையும் முன்னிலைப்படுத்தி, "எல்லீரும் கேளுங்கள்: யான் யாதொரு குற்றமுமில்லேன்; என் காதலனைக் கொன்ற அரசன் நகரின்மீது தணியாக் கோபங் கொண்டேன்!" என்று வீரமொழிகளைக் கூறி, வலக் கையால் இடமார்பைத்திருகி எடுத்து, மும்முறை மதுரையைச் சுற்றிவந்து, வீதியில் வீராவேசத்துடன் எறிந்தாள். உடனே அக்கினிதேவன் சடைமுடியோடு ஒரு பார்ப்பன வடிவுடன் வந்து, "மகா பத்தினி,

உனக்குப் பிழை செய்த நாளில் இம்மதுரையம் பதியை எரித்துவிடும்படி முன்னரே ஒரு கட்டளை பெற்றுள்ளேன்; இப்பொழுது யாரை அழித்தல் வேண்டும்?'' என்றுகேட்டான். அதற்குக் கண்ணகி, "அந்தணர், அறவோர், பசுக்கள், பத்தினிகள், மூத்தோர், குழந்தைகள் என்னுமிவரைக் கைவிட்டுத் தீயோர் பக்கமே சேர்க,'' என்று ஏவினாள். அப்பொழுதே மதுரைநகர் தீ மண்டி எரிவதாயிற்று. உடனே அந்நகரைக் காக்கும் வருணபூதங்கள் நான்கும் பெயர்ந்து போயின. கடைவீதிகளும் இரத வீதிகளும் நால்வகை வருணத்தார் வீதிகளும் கலக்கமுற்றன. தருமமுடையோர் இடம், அழல் சேர்தலின்றிப் பாவிகள் வீடுகளில் அக்கினி பற்றி எரிந்தது. நெருப்பு நெருங்குதலாலே பசுக்களும், கன்றுகளும் அறநெறி தவறாதவர்களாகிய ஆயர் வீதிகளையடைந்தன. நித்திரை செய்துகொண்டிருந்த பெண்டிரும், ஆடவரும் பிழைக்குமிடந்தேடி அலங்கோலமாய் ஓடினர். மாதர்கள் பிள்ளைகளை எழுப்பிக்கொண்டு மாமிக்கிழவிகளோடு வெருவி ஓடினர். கற்புடைய பெண்கள் பலர் "கணவனையிழந்த இக்கற்புடையாள் சிலம்பால் அரசனோடு வெல்வழக்காடிப் பூசல் விளைத்தது நியாயமே'' என்று கூறி, அக்கினியைத் தொழுதனர். நகரமுற்றும் நடைபெறும் விழாக்கள் நடவாமல் ஒழிந்தன. வேத ஓசை அடங்கியது. வேள்வி இயற்றலும், தெய்வபூசனை செய்தலும் இல்லாது போயின. வீடுகளில் விளக்கேற்றல் முதலிய மங்கல காரியங்களும், அரண்மனைகளில் முரசு முழங்குதலும் அறவே ஒழிந்தன.

இவ்வாறு பாழ்பட்டநகரத்தில் கண்ணகி, காதலனுக்குற்ற துன்பத்தால் உள்ளங்கனன்று, கொல்லன் உலைக்களத் துருத்திபோல் பெருமூச்செறிந்து, வீதிதோறும் சுழன்று சுழன்று திரிவாள்; கவலையால்

சிறிது தூரம் செல்வாள்; இயங்கலும் இயங்குவாள்; மயங்கலும் மயங்குவாள். இத்தகைய வீரபத்தினிக்கு முன், தீயின் வெம்மை ஆற்றாத மதுராபதி என்னும் மதுரைநகர்த் தேவதை தோன்றினாள். அவள், கண்ணகியின் உக்கிரத்துக்கு அஞ்சிப்பின்புறத்தில் நின்று, "நங்காய், என் குறையைக் கூறுகின்றேன்; கேட்டருள்," என்றாள். அது கேட்ட கண்ணகி, தன்னுடைய வாடிய முகத்தை வலப்பக்கமாக வளைத்து, 'என் பின் நிற்போய், நீ யார்? என் துன்பம் இன்னதென அறிதியோ?' என்று கேட்டாள். அதற்கு அத்தெய்வம் கூறுவதாயிற்று:

"பெண்ணே, நான் மதுராபதித்தெய்வம்; உன் துன்பத்துக்குக் காரணத்தை அறிவேன்! அதனைக் கேட்பாயாக: உன் கணவன் உற்ற துயருக்கு நான் மிக வருந்துகின்றேன்! நான் இதுகாறும் இந்நகரில் அந்தணரது அருமறை ஓசையல்லது, ஆராய்ச்சிமணி ஓசையைக் கேட்டறியேன்; இப்பாண்டியன், பகைவர் பழி தூற்றுவதல்லது குடிகள் பழி தூற்றியறியான். அறிவு மயங்கிய காலத்தும் பாண்டியர்களில் ஒழுக்கந்தவறி நடந்தவர் இல்லை. இவற்றிற்குப் பொற்கைப்பாண்டியன் சரிதையே போதிய சான்றாகும்: அதனைக் கேள்:

"முன்பு இந்நகரில் கீரந்தை என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் காசியாத்திரை போவதற்குப் புறப்பட்டான். அப்போது அவன் மனைவி, பாதுகாப்பில்லாத தன் மனையில் தனித்திருப்பதற்கு அஞ்சினாள். அந்தணன், "பெண்ணே, நீ அஞ்ச வேண்டா. நமது அரசன் செங்கோல் கோடாத வேந்தன்; ஆதலால், உனக்கு ஒரு தீங்கும் வாராது. உன்னை அரச வேலியே காக்கும்," என்று தேற்றிப் புறப்பட்டுப் போனான். நகர் பரிசோதனைக்கு வந்த பாண்டியராஜன், அந்தணன் இவ்வாறு சொல்லிப் போனதை அறிந்தானாதலால், ஒவ்வொரு நாள் இர

வும் கீரந்தையின் மனைவிக்குத் தெரியாது வந்து அவ ளைக் காத்து வந்தான். சில நாள் சென்றபின் யாத் திரை சென்றிருந்த கீரந்தை திரும்பி வந்து, அன் றிரவு தன் மனைவியோடு பேசிக்கொண்டிருந்தான். வழக்கம்போலப்பார்ப்பனியைக் காப்பதற்குச்சென்ற பாண்டியன், அன்றிரவு வீட்டினுள் ஆண் அரவம் கேட்பதை அறிந்து திடுக்கிட்டுக் 'கள்வனோ, வேறு யாவனோ!' என்று அறிதற்குக் கதவைத் தட்டினான். உள்ளேயிருந்த கீரந்தை, 'கதவைத் தட்டியவன் கள் வனோ, வேறு யாவனோ!' என அஞ்சி ஐயமுற்றுத் திகைத்தான். அதனைக் கண்ட அவன் மனைவி, "நீர் யாத்திரை போகும்போது அரசவேலியே காக்கும் என்றுசொல்லிப் போனீரே; இப்போது அவ்வேலி காவாதோ?" என்று கேட்டாள். இதனைக் கேட்ட பாண்டியன், 'ஆராயாது இச்செய்கையைச் செய்து இவர்களிருவருக்கும் மன வருத்தத்தை உண்டாக்கி விட்டோமே!' என்று கதவைத்தட்டிய தன் கையை வாளால் வெட்டிவிட்டான். பின்பு அவனுக்குத் திரு வருளால் பொற்கை வளர்ந்தது. இப்படிச் சிறிய குற் றத்தைச் செய்தாலும் பெரிய குற்றத்தைச் செய்த தாகப் பாவித்து அநுதாபப்படுகின்ற அன்னவன் குலத்தில் பிறந்தோர் செம்மையினின்று தவறுதல் ஒரு நாளுமில்லை; இன்னமும் கேள் :

"சோழநாட்டில் பராசரன் என்னும் பார்ப்பான் ஒருவன் இருந்தான். அவன் சேரநாட்டரசனாகிய மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பவனது பெருங் கொடையைக் கேள்வியுற்று அவனிடம் சென்று, சபையிலுள்ள கல்விமான்களைத் தன் கல்வித் திறமை யால் வாதம் செய்து வென்றான். அதற்காக அவ்வர சன் மிகுந்த ஆபரணங்களையும் பொன் முடிச்சையும் அவனுக்குப் பரிசாக அளித்தான். அவற்றைப்பெற்று வெற்றியுடன் மீண்டு தன்னூருக்குப் புறப்பட்டுவந்த

பார்ப்பான், பாண்டி நாட்டில் திருத்தங்கால் என்னும் ஊரையடைந்து, ஓர் அரசமரத்தடியில் (போதி மன்றத்தில்) உட்கார்ந்து, இளைப்பாறினான். அவ்விடத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர் வந்து புதியவனான அவனைச் சூழ்ந்து நின்றனர். அவர்களைப் பார்த்து, அவன், 'பார்ப்பனச் சிறுவர்களே, நான் இப்போது உங்களைப் பரீக்ஷிக்கப் போகின்றேன்; நான் கேட்கிற சுருதியைத் தவறாது சொல்பவர்க்கு இந்தப் பொருள் முடிச்சைக் கொடுத்துவிடுகிறேன்,' என்று சொன்னான். அச்சிறுவருள் வார்த்திகன் மகன் தக்ஷிணாமூர்த்தி என்பவன் மற்றை யாவரினும் சந்தந் தவறாமல் மகிழ்ச்சியோடு அந்தச் சுருதியை ஓதினான். அவனைப் புகழ்ந்து பராசரன், முத்துப்பூணூல், காப்பு, பொற்காசுகள் முதலியன பொதிந்த அப்பொதியை அவனுக்குக் கொடுத்துத் தன்னூர்க்குச் சென்றான். ராஜ சேவகர்கள் தக்ஷிணாமூர்த்தி பரிசாகப்பெற்ற பொருள்களைக் கண்டு பொறாமை கொண்டு, 'ராஜ நீதிக்கு விரோதமாய் இந்தப் பார்ப்பான் களவுப் பொருளை வாங்கினான்,' என்று தக்ஷிணாமூர்த்தியின் தந்தை வார்த்திகனைச் சிறைப்படுத்தினர். வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பவள், அது கண்டு துன்பமுற்றுப் பூமியில் விழுந்து புரண்டழுதாள். அதனால், மதுரைத் துர்க்கை தேவியின் கோயிற்கதவம் தானே அடைத்துக்கொண்டது. அச்செய்தியை அறிந்த பாண்டியன், 'என் அரசியலில் ஏதேனும் அநீதி உண்டாயதோ! துர்க்கைக்கு உற்ற துன்பம் என்ன? ஆராய்ந்தறியுங்கள்,' என்று கட்டளையிட்டான். அப்போது சேவகர்கள் வார்த்திகனை அரசன் சமூகத்துக்கு அழைத்துவந்து, நடந்ததை உரைத்தனர். அதனையறிந்த அரசன் வார்த்திகப் பிராமணனைப் பார்த்து, "இவ்வறிவில்லாதவர்கள் செய்கை நன்றன்று; இவர்களால் என் நீதி கெட்டது; இதனைப்

பொறுத்தல் உமது கடன்," என்று சொல்லி, அவன் வாழும் ஊராகிய திருத்தங்காலோடு வயலூரையும் அவனுக்கு மானியமாகக் கொடுத்து வணங்கி அனுப்பி ஞன். அவ்வளவில் துர்க்கை கோயிற்கதவு ஊரெல் லாம் ஓசை கேட்கத் தானே திறந்தது. உடனே 'சிறைக்கூடத்திலுள்ளாரைச் சிறையினின்றும் விடு மின்; வரிகளை வாங்காது விடுமின்; பிறர் கொடுத்த பொருளாயினும், புதையற்பொருளாயினும் பெற்ற வர்க்கும் எடுத்தவர்க்குமே உரியதாகும், என்றுபறை யறைவித்து அரசநீதியை அறிவித்தவன் இப் பாண்டியன்.

"இப்பாண்டியனது அரசமுறை மிகச்சிறந்தது. மேலும் இத்தகைய அரசனும் இந்நகரும் ஆடித்திங் கள், கிருட்டிண பக்கம், பரணியோடு சேர்ந்த கார்த் திகை நட்சத்திரம், வெள்ளி வாரம் இவை சேர்ந்த தினத்தில் தீயால் அழியுமென்று முன்னரே சோதிட வார்த்தையும் உண்டு; அது தவருதன்ரே! உன்கண வனுக்கு இத்துன்பம் உண்டாதற்குக் காரணமா யிருந்த ஊழ்வினையை உரைக்கின்றேன்; கேள்:

"கலிங்க நாட்டில் சிங்கபுரத்தரசன் வசு என்பவ னும், கபிலபுரத்தரசன் குமரன் என்பவனும் தாயாதி கள். ஆதலின், தம்முள் பகைமை கொண்டு தங்கள் நகர்க்கு இடையிலுள்ள ஆறுகாத தூரம் அளவும் பெரும்போர் செய்தனர். அவ்வழியாகச் சென்று பொருள் தேட விரும்பிய சங்கமன் என்பவன் மாறு வேடம் பூண்டு, பண்டங்களைச் சுமந்து போய், தன் மனைவியுடன் சிங்கபுரத்துக் கடைவீதியில் அவைகளை விற்றுக்கொண்டிருந்தான். அரசன் சேவகனுன பர தன் என்பவன், அவன்மீது கொண்ட பகைமை காரணமாக அவனைப் 'பகை அரசனுடைய ஒற்றன்' என்று பிடித்துக்கொண்டுபோய், அரசனுக்குக் காட்

டிக் கொலை செய்துவிட்டான். கொலையுண்டிறந்த சங்கமன் மனைவி நீலி என்பவள், மிக்க துயரமுற்று, பலவாறு முறையிட்டுப் பதினான்கு நாள் பலவிடத்தும் சென்று அழுதரற்றி, ஒரு மலைமீதேறி வீழ்ந்து உயிர் துறந்து கணவனை மறுமையில் கூடுதற்கு நினைந்தவள், 'எமக்கு இத்துயர் செய்தோர் மறு பிறப்பில் தாமும் இத்துன்பமே அடைவார்களாக!" என்றுசாபமிட்டு, மலையினின்றும் வீழ்ந்திறந்தாள். அப்பரதனே பின்பு கோவலனாகப் பிறந்தான். அவள் இட்ட சாபம் கிட்டியதாகலின், நீங்கள் இத்துன்பம் உற்றீர்கள்.

'உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மை யில்லோர்க்குச் செய்தவம் உதவாது.'

கண்ணகி, இற்றைக்குப் பதினான்காம் நாளின் மாலைப் பொழுதில் நீ உன் கணவனைத் தேவவடிவிற் கண்டு, அவனோடு சுவர்க்கம் புகுவாய்,' என்று இவ்வாறு உரைத்து மதுராபதித் தெய்வம் கண்ணகியைத் தேற்றி, நகரின் தீயைத் தணிப்பித்துச் சென்றது. கண்ணகியும் மதுரை விட்டு நீங்கக் கருதினாள்.

மதுரையை விட்டுப் புறப்படக்கருதிய கண்ணகி, துர்க்கை கோயில் வாசலிலே தன்னுடைய கைவளையைத் தகர்த்து உடைத்துவிட்டு, "கீழ்த்திசை வாயிலின் வழியாகக் கணவரோடு மதுரையில் வந்தநான், இப்போது தமியேனாய் மேல்திசை வாயிலின் வழியாகப் போகின்றேன்! இனி என் கணவரைக் காணும் அளவும் ஓரிடத்தும் இருத்தலும் இலேன்! நிற்றலும் நில்லேன்!" என்றுகூறி, இரவுபகல் ஓயாது வையைக் கரையை வழியாகக் கொண்டு மேடென்றும் கிடங்கென்றும் பாராமல், மேற்குத் திசையை நோக்கிப் புறப்பட்டாள்.

பாண்டி நாடு, அன்று தொட்டு மழையின்றி வறுமையெய்தி, வெப்பு நோயும் குருவும் முதலாகிய பல வகை நோய்க்கும் இடமானது. பின்பு கொற்கை நகரிலிருந்த வெற்றிவேற்செழியன் என்னும் இளஞ்செழியன் வந்து, அரியாசனம் ஏறிப் பொற்கொல்லர் ஆயிரம்பேரைப் பலியிட்டுக் களவேள்வியால் சாந்தி செய்து, கண்ணகியை வழிபட்டு விழாச் செய்தான். அது முதல் பாண்டி நாடு செழித்தது.

வையை வழிக்கொண்ட கண்ணகி, மலைநாட்டில் திருச்செங்குன்று என்னும் மலைமீது ஏறி, ஒரு வேங்கை மரத்து நிழலில் நின்றாள். மலையில் வாழும் குறத்தியர் அவளைக் கண்டு, "அம்மையீர், எங்கள் வள்ளியம்மையைப்போலக் காணப்படுகிறீர்; நீர் யாரோ?" என்றார்கள். அவள், "யான் ஊழ்வலியாலே, மதுரை நகரும் பாண்டியனும் கேடுற அந்நகரில் கணவரை இழந்துவந்த கடும்பாவி" என்றாள்; பின்னர், மதுரா, பதித் தெய்வம் உரைத்தபடி பதினான்காம்நாள் மாலையில் தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனைக்கண்டு, களிகூர்ந்து, அவனுடன் தேவ விமானத்தில் ஏறினாள் கண்ணகி. தேவர்கள் பூமழை பொழிந்து இருவரையும் எதிர் வந்து அழைத்துப் போயினர். கண்ணகி இவ்விதம் கணவனோடு விமானம் ஏறிச் சுவர்க்கம் புகுந்ததைக் கண்ட குறத்தியரும்,குறவர்களும் மிக்க ஆச்சரியமுற்று, இங்கு வந்து நின்ற மாது நம் குலத்துக்கே ஒரு பெருந்தெய்வம். "இவள்பொருட்டு நாம் குரவையாடிக் கொண்டாடுவோம்" என்று துணிந்து, தம் இனத்தவரையெல்லாம் அழைத்து, "சிறு குடியீரே, சிறுகுடியீரே, இப்பறம்பின் தாழ்வரையில் வேங்கைமர நிழலில் இவளுக்குக் கோயில் எடுங்கள். குன்றின் வளம் குன்றாது பெருகுதற்கு இந்நங்கைக்குத் தொண்டகம், சிறு பறை கொட்டுமின்; கொம்பை ஊதுங்கள்; கொடுமணி ஆட்டுங்கள்; குறிஞ்சிப் பண்

பாடுங்கள்; நறும்புகையெடுங்கள்; பல பூக்களைத் தூவுங்கள்" என்றுகூறிக்குரவைக்கூத்துநிகழ்த்தினர்.

## கண்ணகி சேர நாட்டில் தெய்வமாதல்:

கண்ணகிக்கு இங்ஙனம் மலைவாணர்கள் குரவையாடிச் சிறப்புச்செய்த இச்சமயத்தில், சேர ராஜதானியாகிய வஞ்சிமாநகரிலிருந்து அரசு செலுத்துபவனும் இமயவரம்பன்நெடுஞ்சேரலாதன்மகனுமாகிய செங்குட்டுவன் என்பான், இலவந்திகை மாடத்தில் தன் தேவி இளங்கோ வேண்மாளுடன் இருந்தவன், தேவியின் விருப்பப்படி மலை வளங் கண்டு களிக்கக் கருதினன். பின்பு அவ்வாறே தன் பரிவாரங்கள் சூழத் தன் தேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் வஞ்சிமாநகரை விட்டுப் புறப்பட்டு, மலையை ஊடறுத்துக்கொண்டு இழியும் பேராற்றங் கரையின் மணல் மிக்க எக்கரில் தங்குவானாயினன். அப்போது மலையில் குரவை நிகழ்த்தும் குறத்தியர் பாடலும், வேலன் பாட்டும், தினையிடிக்கும் ஓசையும், அருவியின் ஒலியும், புலியோடு பொருகின்ற யானையின் முழக்கமும், பரண்மீதிருந்து தினைப்புனம் காப்போர் கூப்பீடுகளும், இன்னும் பல்வகைஓசையும் ஆற்று மணலில் தங்கியிருக்கும் சேரனது சேனையின் ஆரவாரத்தோடு கலந்தொலித்தன. இவ்வமயத்தில், குறவர்கள் தங்கள் மலையில் வேங்கைமர நிழலிற் கண்ட அதிசயத்தை ஆற்றங்கரையில் தங்கியிருக்கும் தங்கள் அரசனுக்குத் தெரிவிக்கக்கருதி, யானைத்தந்தம், அகிற்கட்டை, சந்தனக்கட்டை, கவரி, தேன் குடம், சிந்தூரம், அரிதாரம், ஏலக்காய், வெற்றிலை, கூவைக்கிழங்கு (Arrow-root), மா, பலா, வாழைக் கனிகள், பூங்கொடிகள், பாக்குத்தாறு, ஆளிக்குட்டி, சிங்கக்குட்டி, புலிக்குட்டி, யானைக்கன்று, குரங்குக்

குட்டி, கரடிக்குட்டி, மலையாடு, பன்னியாடு, மான் குட்டி, கஸ்தூரிக்குட்டி, கிளிப்பிள்ளை, மயில், கானக் கோழி, கிளி முதலிய மலைபடு பொருள்களைக் காணிக் கையாகச் சுமந்து, அரசன் சமுகத்திற்போய், 'எம்பிறப்படியோம், வாழ்கவின் கொற்றம்!' என்று அவன் அடி வணங்கினார்கள். பின்பு அவர்கள் அர சனை நோக்கி, "வேந்தர் வேந்தே, நாங்கள் வாழும் மலையிடத்து ஒரு வேங்கைமர நிழலில் மங்கை யொருத்தி ஒரு பக்கமார்பு சிதைந்தவளாய்ப் பெருந் துயரோடும் வந்து நிற்க, தேவர் கூட்டம் அவ்விடம் வந்து அம்மங்கைக்கு அவள் காதற்கொழுநனைக் காட்டி, அவளையும் தேவ விமானத்தில் அழைத்துச் சென்றனர்; அவள் எந்நாட்டாளோ, எவர் மகளோ, அறியோம்! இது பெரியதோர் அதிசயமாய் இரா நின்றது; பெருமானது நாட்டில் நிகழ்ந்த இதனை அறிந்தருளல் வேண்டும்," என்று பணிவுடன் தெரி வித்தனர்.

அப்போது, மதுரையில் கோவலன் கொலையுண் டதும், கண்ணகி மதுரையை எரித்ததும் முதலாகிய செய்திகளை நேரில் அறிந்தவராகிய மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் என்னும் தண்டமிழ்ப்புலவர், அரசனுடன் அங்கிருந்தவர், குறவர் கூறிய இச்செய் தியை அரசனுக்குத் தெரிவிக்கக்கருதி, "சேரர் வேந்தே, நான் அறிவேன் அது நிகழ்ந்த வாற்றை," என்று தொடங்கி, சிலம்பு கவர்ந்த திருடனென்று கோவலனைப் பாண்டியன் கொலை செய்வித்ததும், கண்ணகி பாண்டியன் முன் பெருஞ்சினத்துடன் வழக்குரைத்து வென்றதும், பாண்டியன், கொடுங் கோலுக்கஞ்சி உயிர் நீத்ததும், அவனிறந்தமை ஆற் றாது தேவியிறந்ததும், அரசியின் முன்பு கண்ணகி தன் சிலம்பை வீசி எறிந்துவிட்டுத் தனது மார்பைத் திருகி எறிந்து மதுரையை எரித்ததும் ஆகிய செய்தி களை விளங்கக் கூறிவிட்டுப் பின்பு, "பாண்டியனது கொடுங்கோன்மையைத் தலைமையரசனாகிய உன்னி

டம் கூறவந்தவள் போலத் தன்னாடாகிய சோணாடு செல்லாது உனது நாட்டை வந்தடைவாளாயினள் அம்மங்கை," என்று கூறி முடித்தார்.

இவ்வாறு புலவர் கூறக்கேட்ட செங்குட்டுவன், பாண்டியனுக்கு நேர்ந்த தீவினைப்பயனுக்கு வருந்திப் "புலவீர், ஊழ்வினையால் செங்கோலினின்றும் வழுவிய செய்தி, எம் போன்ற அரசர் செவிகளிற் படுமுன்பே தன் குற்றத்துக்கு இரங்கிப் பாண்டியன் தன்னுயிரை விட்டான். அவ்வாறுவிட்ட உயிரே ஓர் ஆணியாய்க்கொடுங்கோலைச் செங்கோலாய் நிமிர்த்து விட்டது; அரசராயுள்ளோர்க்குத் தம்நாட்டில் மழை, காலத்தே பெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் பிழை செய்யுமாயின் அச்சம்; கொடுங்கோலுக்கஞ்சி மன்னுயிர் காத்தலைக் கடப்பாடாகவுடைய அரசர் குடியிற் பிறத்தல் துன்பமல்லது இன்பமன்று" என்றுசாத்தனார்க்குக் கூறிவிட்டுத் தன் தேவியை நோக்கி "அன்பிற்கருங்கலமாகிய பெண்ணே, கணவனுடன் உயிர் நீத்த பாண்டியன் தேவியும், சினத்துடன் நம்நாட்டை நாடி வந்த கண்ணகியும் ஆகிய இவ்விருபெரும்பத்தினிகளுள் யாவர் வியக்கத்தக்கவர்?" என்று வினவினான். அதற்கு வேண்மாள், "தன் காதலனது துன்பத்தைக் காணப் பொறாது உயிர் நீத்த பண்டியன் பெருந்தேவி விண்ணுலகத்தே பேரின்பமுறக்கடவள்; அது நிற்க. இப்போது வேற்று நாட்டிலிருந்து நமது நாடடைந்த பத்தினியை நாம் தெய்வமாகக் கோயில் செய்து பரசுதல் இன்றியமையாதது," என்று கூறினாள்.

இதனைக்கேட்ட அரசன் தன் தேவியின் விருப்பத்திற்கு இணங்கி, அமைச்சரைநோக்கினான். அதனையறிந்த அமைச்சர்கள் "நம் நாடு நோக்கிவந்த அப்பத்தினித் தெய்வத்திற்குப் படிமம்சமைப்பதற்குரியசிலையைப் பொதியமலையிலேனும் இமயமலையிலேனு

மிருந்து எடுத்து வரல்வேண்டும்; அக்கல், பொதியக் கல்லாயின், காவிரியினும், இமயக்கல்லாயின், கங்கையினும் நீராட்டித்தூய்மைசெய்தல் மரபாகும்'' என்று கூறினர். இங்ஙனம் கூறக்கேட்ட செங்குட்டுவன், "பொதியமலையிற் கல் எடுத்துக் காவிரியில் நீராட்டல், எம்போன்ற வீரமிக்க சேரர்குடியிற்பிறந்தார்க்குச் சிறப்போடு பொருந்திய செய்கையாகாது; ஆதலால், இமயத்தில்கல்லெடுத்துக்கங்கையில் நீர்ப்படை செய்தலே எம் பெருமைக்கேற்ற செயலாகும்; இமய வரையன் நம் விருப்பிற்கிணங்கானாயின், வஞ்சி சூடிச் சென்று பொருது சிலை பெறுவோம்,'' என்று வீராவேசத்துடன் உரத்துக்கூறினான்.

இங்ஙனம் சேரன் கூறியதைக் கேட்ட வில்லவன் கோதை என்ற சேனாதிபதி, அரசனை வாழ்த்தி, "வேந்தே, உம்மைப்போலும் வேந்தராகிய சோழ பாண்டியர், உம்மொடு பகைத்துக் கொங்கர் செங்களத்திற்செய்த போரில், அவர்கள் தமது புலிக்கொடியையும், மீனக்கொடியையும் போட்டுவிட்டு ஓடியசெய்தி திசையானைகளின் செவியிலும்சென்று எட்டியதன்றோ! கொங்கணர்,கலிங்கர்,கருநாடர்,பங்களர், கங்கர், கட்டியர், வடவாரியர் என்னும் அரசர்களுடன் உமது தமிழ்ப்படை கலந்து செய்த போர்க்களத்தில், நீவிர் யானைமேற்சென்று பகைவரை வெந்நிட்டழியச்செய்த அரியசெய்கை இன்னும் எங்கள் கண்களை விட்டகலவில்லை;அன்றியும் எம் கோமகளாகிய உம் தாயின் படிமத்தைக் கங்கையில் நீராட்டிய காலத்தில் எதிர்த்து வந்த ஆரிய மன்னர் ஆயிரவருடன் நீர் ஒருவராக நின்றுபொருத சினவெங்கோலத்தைக் கடுங்கண் கூற்றமும் கண்விழித்துப் பார்த்ததன்றோ! கடல் புடை சூழ்ந்த இந்நிலவுலகமுழுவதையும் வென்று தமிழ் நாடாக்கக் கருதி நீவிர் வடநாட்டு

யாத்திரை செய்யின் உம்மை எதிர்ப்பார் அங்கு யாவர்! இப்போது நீவிர்செய்யவிருக்கும் வடநாட்டு யாத்திரையைக் குறித்து ஆங்கு வாழும் அரசர்க் கெல்லாம் வில், கயல், புலி இவற்றை இலச்சினையாகக் கொண்ட உம் திருமுகத்தை முன்னே விடுத்தருள வேண்டும்," என்று கூறினான்.

இதனைக் கேட்ட அழும்பில் வேள் என்னும் அமைச்சன், "இந்நாவலந்தீவில் நமக்குப் பகைவராயுள்ளாரின் ஒற்றர்கள், நம் நகரத்தை நீங்காது இருப்பார்களாதலால், நாம் நம் வடநாட்டு எழுச்சியைப் பறையறைந்து நம் நகரில் தெரிவிக்குமாறு செய்திடின், அவ்வொற்றர்களே பகையரசர்க்கு இச்செய்தியைத் தெரிவித்துவிடுவர்; ஆதலால், திருமுகம் விடுத்தல் மிகையாகும்," என்று சொன்னான். அரசனும் அதற்கு உடன்பட்டுப் பேராற்றங்கரையினின்றும் பெயர்ந்து, பரிவாரங்களுடன் வஞ்சிமாநகர் வந்து சேர்ந்தான். சேர்ந்ததும் யானைமேல்முரசை ஏற்றிச் செங்குட்டுவனது வடநாட்டுப் பயணத்தைப்பற்றியும் அப்போது இடையிலுள்ள பகையரசர் வந்து வணங்காவிடில் அவர்க்கு நேரும் தீங்குகளைப்பற்றியும்

"வாழ்க! எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவல னாதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின்; கேளீ ராயின்,

தோட்டுணை துறக்கும் துறவொடு வாழுமின் ;
தாழ்கழல் மன்னன் தன்திரு மேனி
வாழ்க சேனை முகம்!''

என்று வள்ளுவன் தெருவெங்கும் கூறி முரசறைந்தான்.

இவ்வாறு வஞ்சிமாநகரில் வடநாட்டு யாத்திரை குறித்துப் பறையறையப்பட்ட பின்னர் அன்றுமாலையில் ஆசான், பெருங்கணி, அமைச்சர், சேனாதிபதிகள் சூழ்ந்து வாழ்த்தி, ஆணையை எதிர்பார்த்து நிற்க, சேரன் செங்குட்டுவன் சிங்காதனத்தில் வீற்றிருந்து, சேனைத் தலைவர்களை நோக்கி, "ஆரியமன்னர்கள், தம் நாட்டில் நடந்த ஒரு சுயம்வரத்தில் கூடியிருந்த போது, 'தமிழ் நாடாளும் வேந்தர் படையுடன் வந்து இமயமலையின் நெற்றியில் தமக்குரிய வில், கயல், புலிக் குறிகளைப் பொறித்த நாளில் 'எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை,' என்று கூறித் தமிழ் வேந்தரை இகழ்ந்துரைத்த செய்தி, இங்கு வந்த தாபதரால் அறியலானோம்; அவ்விழிந்த மொழி தமிழ் வேந்தர் அனைவர்க்கும் சால இழிவு பயப்பதாகும்; ஆகலின், அங்ஙனம் இகழ்ந்து பேசிய ஆரிய மன்னர் முடிமேல் பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய கல்லை ஏற்றிக் கொண்டு வருவேன் ; அங்ஙனம் செய்யாது என் கை வாள் வாளா வருமாயின், நான் பகையரசரை நடுங்கச் செய்யாது குடிகளை நடுங்கச்செய்தகொடுங்கோலனாகக்கடவன்!' என்று அப்பேரவையில் சினமிகுந்து வஞ்சினங் கூறினன் ; ஆசான், 'அரசே, கோபந் தணிக!' என்று சமனஞ் செய்தனன். அப்போது நிமித்தம் வல்லவனாகிய மௌத்திகன் எழுந்துநின்று, 'வேந்தே, பகைவேந்தரெல்லாம் உன் திருவடியை வணங்கத்தக்க நல்முழுத்தம் இதுவே; நீ கருதிய வடதிசைச் செலவுக்கு இப்போதே எழுதல் நன்று,' என்றான்.

நிமித்திகன் இங்ஙனம் கூறியதற்குச் செங்குட்டுவன் இசைந்து, தன் வாளையும் குடையையும் வடதிசைப் பெயர்த்து, நாட்கொள்ளும்படி கட்டளையிட்டான். அவ்வாறே ஐம்பெருங்குழு எண்பேராயம் எனப்படும் சபையோர்களும், கரும வினைஞர், கணக்கியல் வினைஞர் முதலிய அரசாங்க நிர்வாகிகளும் சேர்ந்து, பல்வகை வாத்தியம் முழங்கப் பட்டவர்த்தனக்களிற்றின் மேல் ஏற்றிய அரசவாளையும் வெண்கொற்றக் குடையையும் வஞ்சியின் வடதிசைப்புறமதிலுள் புகும்படி செய்தனர். அன்றிரவு, அரசன் போர் வீரர்கட்கும் பெருஞ்சோற்று விழாவொன்று செய்து அவர்களுடனிருந்து உண்டு, அவர்கட்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டு பண்ணினான். பின்பு வடநாட்டு வேந்தரை வெல்ல மேற்செல்லும் தன் கருத்தும் தோன்ற வஞ்சிமாலை முடியிலணிந்து மறுநாட்காலையிற் புறப்படச் சித்தமாயிருந்தனன்.

பொழுது புலர்ந்ததும் அரண்மனையில் மங்கல முரசம் முழங்கியது. அவ்வேளையே பயணத்திற்குக் குறித்த வேளையாதலால், செங்குட்டுவன், தன் குல தெய்வமாகிய சிவபெருமான் திருவடியை வலங்கொண்டு வணங்கி முடியிலணிந்து, பட்டவர்த்தனக் களிற்றின் மீதூர்ந்து, நால்வகைப்படையும் சூழப் புறப்பட்டுச் சென்று, நீலகிரியை அடைந்து, அங்கு அமைந்திருந்த பாடியில் தங்கி இளைப்பாறினன்.

இச்சமயத்தில், கொங்கணக் கூத்தரும், கருநாடகரும், குடகரும், ஓவரும் தத்தமக்குரிய அலங்காரங்களுடன் அரசன் முன் வந்து, ஆடல் பாடல்களைச் செய்து பரிசில் பெற்றுச் சென்றனர். பின்பு சஞ்சயன் முதலிய தன் தூதுவர்கள் பல்வகைத்திறைப்பொருள்களோடு வந்து வணங்கி, "அரசர் பிரானே, வடதிசைச்செல்வது பத்தினிக்கடவுளின் உருவம்சமைத்தற்குரிய சிலையின்பொருட்டேயாயின், 'நாங்களே

இமயத்திற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து தருகின்றோம்,' என்று நம் நட்பரசராகிய நூற்றுவர் கன்னர் தெரிவித்திருக்கின்றனர்," என்று கூறி நின்றனர். அது கேட்ட செங்குட்டுவன், "வட நாட்டு அரசனாகிய பாலகுமாரன் மக்கள் கனகன் விஜயன் என்ற இருவரும், வடவரசர் பலருடன் கூடியிருந்த அமையத்தில் தம் நாவைக்காவது, எம்முடைய வலிமையை இகழ்ந்துரையாடினராம்; அதனால் பத்தினிப் படிமத்துக்குக் கல்கொணரச் செல்வதோடு, இகழ்ந்த அவ்வடவேந்தரை வெல்வதற்கும் செல்கின்றது இப்படை என்பதனை நூற்றுவர் கன்னர்க்குத் தெரிவித்துக் கங்கையாற்றைக் கடப்பதற்கு நாவாய் முதலியன அமைத்து வைக்கவும் கூறுங்கள்," என்று சஞ்சயனை முன்னர் அனுப்பி வைத்தனன். பின்பு பாண்டியர் முதலிய அரசரிடமிருந்து அச்சமயம் வந்த திறைப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு செங்குட்டுவன் நீலகிரிப் பாடியினின்றும் எழுந்து வடதிசை நோக்கிப் புறப்பட்டான்.

இங்ஙனம் புறப்பட்ட செங்குட்டுவன், கங்கை ஆற்றை அணுகி, தன் நட்பரசராகிய நூற்றுவர் கன்னர் அமைத்து வைத்திருந்த மரக்கலங்களில் ஏறி, அக்கரைசார்ந்து,அவர்களால்உபசரிக்கப்பெற்று,அங்கிருந்தும் புறப்பட்டு உத்தர கோசலத்தையடைந்து, பாசறை அமைத்துத் தங்கியிருந்தனன். இவ்வாறு சேரன் தம் நாட்டில் பாசறையமைத்துத்தங்கியிருப்பதையறிந்தவுடன் அந்நாட்டரசர்களான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்பவர்களைத் துணைக்கொண்டு கனகவிசயர் என்ற வடவேந்தர், 'தமிழர் ஆற்றலைக் காண்போம் என்ற தருக்குக் கொண்டுபெருஞ்சேனையுடன் வந்துஎதிர்த்தனர்.இவ்வாறு ஆரியவரசர் ஒருங்கு கூடி வருதலைக் கண்ட செங்குட்டுவன், இரையை வேட்டு, வேட்டையிற்

சென்ற சிங்க ஏருனது யானைக் குழாங்களைக்கண்டு பாய்வது போலப் பாய்ந்து, வடவரசர் சேனைகளைக் கொன்று குவித்து நூழிலாட்டினுன். போரில் அழிந்தவர் போக, ஒழிந்தவர்களெல்லாம் தத்தம் படைகளை எறிந்துவிட்டு, சடை, காஷாய உடை, சாம்பல் இவற்றைப் பூசி, 'சந்நியாசிக'ளென்றும், பீலியேந்தி 'சைன முனிவர்' என்றும், இன்னும் 'பாணர்' என்றும், 'கூத்தரென்றும்' சொல்லித் தப்பியோடினர். நாவைக் காவாது தமிழரசரை இகழ்ந்த கனக விசயர் இருவரும் தம் துணையரசர் ஐம்பத்திருவருடன் சேரன் கையில் அகப்பட்டனர். தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டுத் திங்களிலும், பாண்டவ கௌரவர் யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவ கனகவிசயர் யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தன," என்று உலகம் கொண்டாடப் பெரும்போர் புரிந்த அசகாய சூரனுகிய செங்குட்டுவன், பின்பு தன் சேனைத் தலைவன் வில்லவன் கோதையைப் படையுடன் போக்கி இமயமலையினின்றும் பத்தினிக் கடவுளின் படியம் சமைப்பதற்குத் தக்க சிலையைக்கொணரச்செய்தான். பின்பு அதனைத் தோற்ற வேந்தராகிய கனகவிசயரது முடித்தலையில் ஏற்றிக் கங்கையை அடைந்து, சிலையைக் கங்கை நீரில் முறைப்படி நீர்ப்படை செய்து, தென்கரைசேர்ந்து நூற்றுவர் கன்னரால் அமைக்கப்பட்ட அழகிய பாடியில் தங்கினுன். பின்னர்ப் போரில் புறங்காட்டாது பொருத படைத் தலைவர்கட்கும் வீரர்கட்கும் வெற்றிக்கறிகுறியாகப் பொன்னுலாகிய வாகை மாலைகளை நெடும்பொழுதளவுமிருந்து வழங்கினுன்.

இவ்வமயத்தில் கங்கையாடுதற்கு வந்த மாடலன் என்னும் மறையவன் செங்குட்டுவனது இருக்கைக்கு வந்து, அவனை வாழ்த்தி, 'மாதவியின் கானல் வரிப்பாட்டானது, கனகவிசயரது முடித்தலையை

நெறித்துவிட்டது' என்று நகை விளையக்கூறினான். இதனைக் கேட்ட சேரன், "மாடல, நீ இப்போது கூறிய ஆசியக்கூற்றின் பொருள் இன்னதெனவிளங்கக்கூறுதி," என்று கூறினன். கூறலும், அவன் புகார் நகரத்தில் மாதவியும், கோவலனும் விழாமுடிவிற்கடலாடச் சென்றது முதல் நிகழ்ந்த வரலாறெல்லாம் விரித்துக்கூறித் தான்கூறியசொற்றொடரின்பொருளை விளங்க வைத்தான்; மேலும் அவன் மதுரையில்கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற இடைக்குல மடந்தை மாதரி, அடைக்கலப் பொருளை இழந்தமைக்கு ஆற்றாது தீப்பாய்ந்திறந்ததும், கவுந்தியடிகள், கோவலன் கொலை பொறாது, உண்ணா நோன்புபூண்டு உயிர் நீத்ததும், கோவலன் தந்தை, பொருள் முழுதையும் தானம் புரிந்து தவக்கோலமுற்றதும், அவன் மனைவி பெருமனைக் கிழத்தி, புத்திர சோகத்தால் உயிர் விட்டதும், கண்ணகியின் தந்தை சமணமதம் சார்ந்ததும், அவன் மனைவி உயிர் நீத்ததும், இவற்றையெல்லாம் அறிந்த மாதவி பிக்குணிக்கோலம் பூண்டதும் ஆகிய தென்னாட்டுச் செய்திகள் பலவற்றையும் எடுத்து மொழிந்து, "மதுரையினின்றும் புகாருக்குச் சென்ற யான் கூறிய செய்தி, அங்குப் பலர் இறத்தற்குக் காரணமானபடியால் அத்தீங்கு தீரக்கங்கையாட வந்தேன்," என்றும் கூறி அங்கு அமர்ந்தான்.

இங்ஙனம் மறையவன் கூறியவற்றையெல்லாம் செவியேற்ற செங்குட்டுவன், அவனைப் பார்த்து, "நெடுஞ்செழியன் துஞ்சிய பிறகு பாண்டிநாடு எந்நிலை உற்றது?" என்று வினவ, மாடலன், "அரசே, கொற்கையிலிருந்த வெற்றி வேற்செழியன் மதுரைக்கு வந்து பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக்களவேள்வியால்சாந்திபுரிய

நாடு செழித்தது. அவன் சிங்காதனமேறி அரசாளு கின்றனன்,” என்று கூறினன்.

இங்ஙனம்,வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் மாலைக் காலம் வந்தமையால் காலக் கடன் முடிக்கச் சென்ற சேரன், குடதிசையில் செவ்வானத்தில் திக ழும் வெண்பிறையைக் கூர்ந்து நோக்கினான். அப் போது அரசனது சோதிடன், “நாம் வஞ்சிமாநகர் விட்டு இங்கு வந்து முப்பத்திரண்டுமாதம் கழிந்தன,” என்றான். உடனே அரசன் தன் ஆசனத்தில் வந் தமர்ந்து, மாடலனிடம் தன் மைத்துனனாகிய பெரு நற்கிள்ளியின் ஆட்சி நலம் எத்தகையது என்று வினவ, மறையவன்,“சோழர் குலத்தவர் செங்கோல் கோடி வேறாகும் காலமும் உண்டோ?” என்றுவிடை பகர்ந்தான். அதன்மேல் சேரன் மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐம்பது துலாம்பாரம் பொன் தானமாக அளித்தனுப்பினான். தமிழ் நாடாளும் வேந்தர் ஆற் றலை அறியாது இகழ்ந்து அவமானமுற்ற கனகவிசய ரைச்சோழ பாண்டியர்க்குக் காட்டி வரும்படி நீலன் முதலிய ஒற்றரை அனுப்பிவிட்டுக் கங்கைக் கரையி னின்றும் சேனைகளுடன் புறப்பட்டு ஆங்காங்குத் தங் கித்தன் வருகையைஎதிர்பார்த்திருக்கும்கோப்பெருந் தேவி மகிழவும், பல்வகை வாத்தியங்கள் முழங்கக் குஞ்சர வொழுகையொடு கோநகர் முழுவதும் வந் தெதிர்கொள்ளவும் பட்டத்து யானைமீது வெண் கொற்றக் குடை நிழற்ற முடிமீது வாகைமாலை மிளி ரச் சேரன் வஞ்சி மூதூர் வந்து புகுந்தான்.

வஞ்சிமாநகர் புகுந்த செங்குட்டுவன், ஒருநாள் பூரணசந்திரன் விளங்கும் அந்திக்காலத்துப் பரிவாரங் கள் சூழத் தன் தன்மபத்தினியாகிய இளங்கோவேண் மாளோடுங் கூடி நிலாமணியரங்கை அடைந்து சாக் கையன் என்பான் நிகழ்த்திய கொட்டிச்சேதம்

என்னும் கூத்தினைக் கண்டு களித்தான். பின்னர்ச் செங்குட்டுவன் தேவியுடன் நிலாமுற்றத்தை விட்டுப் புறப்பட்டுப் பேரோலக்க மண்டபத்தையடைந்து, அரியணையில் வீற்றிருந்தான். அப்போது, கனகவிசயரைக் கல்லேற்றி அழைத்துச் சென்ற நீலன் முதலியோர்கள், அரசன் அவையில் வந்து வணங்கி, "அரசே, கட்டளைப்படியே நாங்கள் சோழர் தலைநகர் சென்று, அங்குச் செம்பியர் பெருமானைக்கண்டு ஆரிய மன்னர்களைக் காட்டி வணங்கினோம். அவர்களைக் கண்ட சோழன், 'போரிற் பேராண்மையுடன் பொருது அஞ்சியோடிய வேந்தரைப் பிடித்து வருதல் ஒரு வெற்றியாகாது,' என்று கூறினன். பின்னர், 'வேந்தே, மதுரை சென்று பாண்டியனைக்கண்டோம், பாண்டியன், 'தப்பியோடிய மன்னர்மேல் இவ்வாறு சீற்றங்கொண்ட அரசனது வெற்றி இதுவரை யாம் காணாத புதுமையாகும்,' என்றான்," என்று சொல்லி நின்றனர். இவ்வாறு தன் வெற்றியைச் சோழபாண்டியர் இகழ்ந்தனர் என்ற அளவில் செங்குட்டுவன் கோபம் பெருகிக் கண்கள் சிவந்து வெகுளி நகை செய்தனன். இங்ஙனம் அரசனுக்குச் சீற்றம் பெருகுதலைக்கண்ட மாடலமறையோன் சபையில் எழுந்து, "வெற்றி வேந்தே, கோபந்தணிக! பகைவர்களை வென்று நீ அடைந்த வெற்றிபோல் வெற்றிபெற்றார் அரசருள் எவருளர்? உன் வாழ்நாள் பல்குக! நான் சொல்லும் சொற்களை இகழாது ஏற்றருள வேண்டும். உனக்கு ஐம்பது யாண்டு கழிந்தும் நீ அறக்கள வேள்வி செய்யாது எப்போதும் மறக்களவேள்வியே செய்து வருகின்றாய். உலகத்தில், இளமை, யாக்கை, செல்வம் எல்லாம் நிலையாவென்பதனை நீ நன்கறிவாய். உயிர்கள் தாம் செய்யும் நற்கருமங்களுக்கேற்ப உயர் கதியடையும். அத்தகைய யாக கருமங்களை இனி நீ செய்தல் வேண்டும்; ஆதலால், யாகபத்தினியாகிய

உன் தேவியுடன் இராசசூய வேள்வியை உடனே தொடங்குவாயாக," என்று செங்குட்டுவன் மேலும் போர் தொடங்காது கோபம் தணியுமாறு உபதேசித்தனன்.

மாடலன் உபதேசம் பெற்ற அரசன், அவ்வாறே இராசசூய வேள்வி செய்யக்கருதி, அதற்கு வேண்டியனவெல்லாம் சித்தஞ்செய்து, வேள்வியை வேதம் வல்லாரைக்கொண்டு தொடங்கக்கட்டளையிட்டான்.

இவ்வாறு கட்டளையிட்ட பின், உலகமெல்லாம் தொழும் பத்தினியாகத் தான் (கண்ணகி) விளங்குகின்றமையால்,'மடவார் கற்பு அரசர்முறைசெயினல்லது சிறவாது,' என்னும் ஆன்றோர் நீதியைச் (தன் கணவனை நல்வழிப்படுத்தாத) சோழனைக்கொண்டுவிளக்கியும் செங்கோல் வளையின் அரசர் உயிர் வாழார் என்பதனைப் பாண்டியனைக்கொண்டு விளக்கியும், தாம் செய்த சபதம் முடிந்தாலல்லது கடுஞ்சினந் தணியார் அரசர் என்பதனைச் சேரனைக்கொண்டு விளக்கியும், மதுரைமாநகரம் எரிந்தழியுமாறு அழலைத் தன் சாபமொழியால் விளைவித்து, அருஞ்செயல் பல புரிந்து, சேரநாடடைந்து வேங்கைமர நிழலில் நின்றபத்தினி தேவியின்பொருட்டு அழகுபெறச் சமைத்த கோயிலுக்குச் செங்குட்டுவன், அந்தணர், அறிவர், புரோகிதன், நிமித்திகர் தலைவன் இவர்களுடன் சென்று, இமயத்தினின்றும் கொணர்ந்த சிலையில் சிற்பமுறையில் செய்து முற்றுவிக்கப்பெற்ற பத்தினிப் படிமத்தில் மங்கல அணிகள் பூட்டி அலங்கரித்துப் பூப்பலியாகிய அருச்சனைகள் புரிந்து, திக்குத் தேவதைகளைக் கடைவாயிலில் நிறுவி, ஆகம முறைப்படி பத்தினித் தெய்வத்தைப் பிரதிட்டை பண்ணுவித்துப் பெருமகிழ்ச்சி உற்றான்.

இஃது இங்ஙனமாக, கோவலன் கொலையுண்டிறந்தமையைக் கேட்டு, காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியின் செவிலித்தாயும் அடித்தோழி

தேவந்தியும் கண்ணகியைத் தேடிக் காணுதற்குப் புறப்பட்டு மதுரை வந்தனர்; மதுரை எரிபட்டிருப்பதைக் கண்டு மாதரி வீட்டுக்குச் சென்றனர். மாதரி அடைக்கலப்பொருளாகிய கோவலனை இழந்ததனால் தன் புற்றுத் தீயிற்பாய்ந்து இறந்துபோனமையால், அவள் மகள் ஐயையைக் கண்டு, நடந்தவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்தனர். பின்பு அவர்கள் ஐயையோடும் புறப்பட்டு வைகைக் கரை வழியாகச்சென்று, செங்குன்று என்னும் கண்ணகி ஏறிய மலையில் ஏறிப் பின்னர்ப் பத்தினிக் கோயிலை அடைந்தார்கள். அடைந்தவர்கள், அங்கிருந்த செங்குட்டுவனிடம் தாங்கள் 'இன்னார்' என்று தங்கள் வரலாற்றைத் தெரிவித்துக் கண்ணகி தேவியைச தரிசித்துப் பலவாறு அரற்றிப் புலம்பினர். அதனை அவன் கேட்டுக்கொண்டிருக்கையில், கண்ணகி செங்குட்டுவனுக்கு மின்னற்கொடிபோலப்பளிச்சென்று மின்னி, தெய்வ வடிவத்தோடு காட்சி தந்தருளினாள். இதனைக் கண்ட செங்குட்டுவன் மிகுந்த ஆச்சரியமுற்றான். அப்போது தெய்வமாகிய கண்ணகி, "பாண்டியன் தீதில்லாதவன். அவன் இந்திரன் அரண்மனையில் நல்விருந்தாய் விளங்குகின்றான்; நான் இதெய்வ உடபைப் பெறுவதற்கு அவனே காரணமானவனதலால், நான் அவன் மகள்," என்றாள். உடனே வஞ்சி நகரத்துப் பெண்களெல்லாம் கண்ணகியைத் துதித்துப் பாடி, மூவேந்தரையும் வாழ்த்தினர். கண்ணகி தேவியும், "செங்குட்டுவன் நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தினள்.

கண்ணகியின் கடவுட்கோலத்தைத் தரிசித்து நின்ற செங்குட்டுவன், தேவந்தி என்னும் பார்ப்பனியை நோக்கிச் "சிறிது முன்பு நீங்கள் அழுது புலம்பிக்கொண்டு, பத்தினியின் சந்நிதானத்தில் கூறிய மணிமேகலை என்பவள் யார்? அவள் துறவு பூண்டதற்குக் காரணமென்ன?" என்று கேட்

டனன். அதற்குத் தேவந்தி, கோவலனுக்கு நாடகக் கணிகை மாதவி வயிற்றிற்பிறந்த மணிமேகலையின் சரித்திரத்தைக் கூறத் தொடங்கி, அவள் பிறந்ததும் வளர்ந்ததும், கோவலன் கொலையுண்டது தெரிந்து, மாதவி புத்தசமயத்தில் புகுந்து பிக்ஷுணியாகி, மணிமேகலையையும் பௌத்த தர்மத்தில் சேர்த்ததுமாகிய செய்திகளை விரித்துக் கூறி நின்றாள்.

நின்ற தேவந்திமேல் பாசண்டச்சாத்தன் என்னும் தெய்வம் திடுக்கென்று ஆவேசமுற்றான்; அதனால் அவள் கூந்தல் குலைந்து பின்னே தொங்கவும், புருவம் துடிக்கவும், செவ்வாயில் சிரிப்புத் தோன்றவும், மொழி தடுமாறி முகம் வெயர்க்கவும், செங்கண் சிவக்கவும், கையோடு கையைப் புடைத்துக் காலைத் தூக்கி வைத்து ஆடினாள். அங்ஙனம் அவள்மீதுற்ற பாசண்டச்சாத்தன், அரசனோடு நின்ற மாடலன் என்னும் மறையவனை நோக்கி, "நான் பாசண்டச்சாத்தன்; இத்தேவந்திமேல் ஆவேசித்திருக்கிறேன்; பத்தினிதேவியாகிய கண்ணகியின் மங்கலப் பிரதிஷ்டையைக் காணுவதற்கு இங்கு வந்துள்ள பெண்களுள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களும், திருமால் கோயில் அருச்சகன் மகளும் இருக்கின்றார்கள். நான் முன் உன்னிடம் கொடுத்துள்ள மங்கலாதேவி கோயில் மலைச் சுனை த்தீர்த்தத்தை இந்த மூன்று பெண்களின் மீதும் தெளிப்பாயாக அந்தத் தீர்த்தம், தன்னில் மூழ்குவோர்க்குப் பழம்பிறப்பை அறிவிக்க வல்லது. இவர்கள்மீது தெளிப்பாயின் இவர்கள் தங்கள் முற்பிறவியை அறிவார்கள்," என்றான்.

இவ்விதம் தேவந்தி ஆவேசமுற்றுக் கூறியவைகளைக் கேட்டுச் செங்குட்டுவன் ஆச்சரியமுற்று, மாடலனை நோக்கினன். மாடலன், "அரசே, கேள்: முன்

ஒரு நாள் மாலதி என்னும் பார்ப்பனமாது தன் மாற்றாள் பிள்ளையை எடுத்துப் பால் கொடுக்கையில் அக்குழந்தை விதி வசத்தால் பால் விக்கி இறந்து போயிற்று. அதனால் அவள் தன் மாற்றாளும், கணவனும் தன்னைப் பழிப்பார்களே என்று பயந்து வருந்திப் பாசண்டச்சாத்தன் கோயிலில் சென்று வரங் கிடந்தாள். அவளது துயரத்துக்கிரங்கி அச்சாத்தன் அக்குழந்தை உருக்கொண்டு வந்து, 'அன்னாய், நான் வந்தேன்; உன் துயரை ஒழி,' என்று கூறிற்று. அவள் அக்குழந்தையை மாற்றாள் கையில் மகிழ்ச்சியுடன் கொண்டுபோய்க்கொடுத்தாள். பின் அவன வளர்ந்து காளைப்பருவம் வந்ததும் இப்போது இங்கு ஆவேசித் தாடுகின்ற இத்தேவந்தியை மணஞ்செய்து, எட்டாண்டு இவளுடன் வாழ்ந்துவந்தான். இவ்வாண்டுகள் கழிந்ததும் அவன் இவளுக்குத் தன் வரலாற்று உண்மையைக் கூறித் தினந்தோறும் இவளைத் தன் கோயிலுக்கு வருப்படி சொல்லிவிட்டுப் பிறர்க்குத் தான் தீர்த்தமாடச் செல்பவன்போலக் காட்டித்தன் கோயிலுக்குப் போய்விட்டான். பின்பு இவள் அவன் கோயிலுக்குத் தினந்தோறும் சென்று வழிபட்டு வந்தாள். நான் ஒரு சமயம் மங்கலாதேவியின் கோயிலுக்குச் சென்றிருந்தபோது அச்சாத்தன் ஓர் அந்தணன் வடிவுடன் வந்து, உறியிலிருக்கும் இக்கரகத்தைக் கொடுத்துப்போயினன்; போனவன் மீண்டும் வாராததனால், அதனைக் கொண்டு வந்துவிட்டேன். இப்போது அச்சாத்தன் என்னும் தெய்வமே இவள்மீது ஆவேசித்து, இக்கமண்டல நீரைத் தெளிக்கும்படி கூறுகின்றான். அரசே, அப்படியே இப்பெண்கள் மீது இதன் நீரைத் தெளித்துப் பார்க்கலாம்," என்று சொல்லி அந்நீரை அப்பெண்கள் மூவர்மேலும் தெளித்தான். உடனே அச்சிறுமிகட்குத் தங்கள் பழம் பிறப்புணர்ச்சி உண்டாயிற்று. அம்மூவரும் தனித் தனி புலம்பலானார்கள் :

ஒருத்தி, "நான் பெற்ற அருமந்த மகளே, உன் கணவன் தீய ஒழுக்கமுடையவனாய் உன்னைப் பிரிந்திருந்த நிலைமைக்கு வருந்தினின்றஉன் தாயாகியயானும் அறியாமலே, நீ உன் கணவனுடன் அந்நியநாடு சென்றாய்; உற்றார் யாருமில்லாமலே கணவனோடு அங்குக் கடுந்துன்பத்தை அடைந்தாய்," என்று புலம்பினாள்.

ஒருத்தி, "என்னுடன் கூடவேயிருந்த உன் மனைவியும் என் மருகியுமாகிய கண்ணகியை அழைத்துக் கொண்டு நள்ளிரவில் காட்டுவழியே நீ வருந்திச்சென்றனையே! இதனை நினைக்குந்தோறும் என் மனம் வருந்துகிறது. என் அருமை மகனே, என்பால் ஒருமுறை வாராயோ!" என்று புலம்பினாள்.

மூன்றாவதாக மற்றொருத்தி, "இளையோனே, நீ என் மனையில் தங்கியிருந்த காலத்தில், குரவைக்கூத்தாடி முடிந்ததும் வையை ஆற்றுக்கு நீராடச்சென்றிருந்த நான், திரும்பி வரும்போது ஐயோ! நீ கொலையுண்டிறந்தாய் என்று ஊரார் சொல்லக்கேட்டேன்; அதற்கேற்ப மனையில் வந்து பார்த்தபோது, உன்னைக் காணேனாய் வருந்தினேன். எந்தாய், என்னை அறியாது எங்குச் சென்றனையோ! தெரிந்திலேனே!" என்று அழுதாள்.

இவ்வாறாக அச்சிறு பெண்கள் மூவரும் அப்பத்தினிக் கோயிலில் முதியோர் பேசும் பேச்சால் பேசி அரற்றி அழவும், சேரர்வேந்தனாகிய செங்குட்டுவன் வியப்புற்று, மறுமுறையும் மாடலனை நோக்கினான், அவன் நோக்குங்குறிப்பறிந்த மாடலன், அரசனுக்குக் கூறுவான்: "அரசே, கோவலனது அன்பிற்குரிய மனைவி கண்ணகியின்மேல் அவன் தாயும், கோவலனது தாயும் மிகுந்த அன்புள்ளவர்கள்; ஆதலால், கண்ணகியும் கோவலனும் இறந்து சுவர்க்கம் புகுந்த

செய்தியை என் மூலமாகக் கேட்டறிந்ததும் அவர்கள் உயிர் விட்டார்கள். அப்படி அவர்கள் உயிர் விட்டும், சுவர்க்கம் புகுதற்குரிய பெரும்புண்ணியங்களை அவர்கள் செய்திலராகலின், சுவர்க்கம் புகாமல், கண்ணகி மேல் வைத்த பற்றுக்காரணமாகப் பத்தினித்தெய்வம் எழுந்தருளியுள்ள வஞ்சிமா நகரத்தில் அரட்டன் செட்டி மனைவி வயிற்றில் இரட்டைப்பிள்ளைகளாய்ப் பிறந்தனர். ஆயர் முதுமகளாகிய மாதரி, கண்ணகி மேல் வைத்த பேரன்பினாலும், திருமால்பொருட்டுக் குரவைக் கூத்தாடிய விசேடத்தாலும் அரவணையில் பள்ளிகொண்ட பெருமான் திருவடிகளை அருச்சித்துப் பூஜிக்கும் சேடக்குடும்பியென்னும் அந்தணன் மகளாய்ப் பிறந்தனள். இதனால், நல்லறஞ் செய்தோர் சுவர்க்கம் அடைதலும், ஒன்றில் காதல் வைத்தவர் பூமியில் பற்றுள்ளவிடத்தில் பிறத்தலும், பாவ புண்ணியங்களின் பயன் உடனே விளைதலும், பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் புதியன என்பதன்றித் தொன்றுதொட்டு வருவன என்பது நன்கு விளங்கும். நீ சிவபெருமான் திருவருளால் பிறந்து புகழ் மிகுந்த வேந்தனாய் விளங்குதலால், முற்பிறப்பிற் செய்த தவப்பயன்களையும், பெரியோர் தரிசனங்களையும் கையகத்துப் பொருள்போல நன்கு கண்டாய்." என்று சொல்லித் தன் முன்னர் அழுது புலம்பிய சிறு பெண்கள் மூவரும் முற்பிறப்பில் முறையே கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், ஆய்ச்சியாகிய மாதரியுமாய் இருந்தவர்கள் என்பதை விளக்கிச் சொன்னான்.

இவற்றைக் கேட்ட செங்குட்டுவன், மிகவும் ஆச்சரியமுற்றான். அதன்மேல் அவன் கண்ணகியின் கோயிற்பூஜைப் படித்தரங்களுக்கு வேண்டிய நிலங்களைத் தானம் செய்து, நித்திய உற்சவங்கள் நடத்தித் தேவந்தியையேநித்திய பூசைகளைச் செய்துவரும்படி

நியமித்து, அப்பத்தினிக் கடவுளை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான்.

இவன் இங்ஙனம் சிறைப்பட்டு வந்திருந்து, கண்ணகியின் பிரதிஷ்டைகாலத்தில் விடுபட்ட கனக விசயர் என்னும் ஆரிய வேந்தரும், முன்பே வஞ்சி நகரில் சிறைப்பட்டிருந்து விடுபட்ட மன்னரும், கொங்கிளங்கோசர் என்ற சிற்றரசர்களும், மாளுவ தேசத்தரசரும், கடல் சூழ்ந்த இலங்கை அரசனாகிய கஜபாகுவும செங்குட்டுவன் முன்னே அப்பத்தினியை வணங்கினவர்களாய், "தேவீ, எங்கள் நாட்டிற்கும் எழுந்தருளிவந்து இச்சேரமான் செய்த பிரதிஷ்டையில் பிரசன்னமானதுபோலப் பிரசந்நமாகி, எங்கட்கும் அருள்புரிய வேண்டும்." என்று பிரார்த்தித்தனர். இங்ஙனம் அவர்கள் வேண்டி நின்றபோது, "தந்தேன் வரம்" என்று ஒரு தெய்வவாக்கு யாவரும் கேட்க எழுந்தது. அது கேட்டுச் செங்குட்டுவனும் ஏனைய அரசர்களும் சேனைகளும் மோட்சலோகத்தையே நேரிற்கண்டவர்கள்போல மகிழ்ந்து ஆரவாரித்து நின்றனர். அதன் பின், செங்குட்டுவன் மாடலன் என்னும் மறையவனோடு பத்தினிக்கோட்டத்து யாகசாலையைப் பார்ப்பதற்குப் போவானாயினன்.

அதன்பின், செங்குட்டுவன் தம்பியாரும் இக்கண்ணகி சரித்திரத்தைச் சிலப்பதிகாரமென்னும் பெருங்காப்பியமாகப் பாடி முடித்தவரும் ராஜர்ஷியும் கவியுமாகிய இளங்கோவடிகள், அப்பத்தினிக் கோட்டத்தை அடைந்தார். பத்தினித் தெய்வம் தேவந்திமேல் ஆவேசமாய்த் தோன்றி, "சபாமண்டபத்தில் நீ உன் தந்தையாகிய சேரலாதனுடன் சிம்மாசனத்தடியிலிருந்த போது, ஒரு சோதிடன் வந்து உன்னைப் பார்த்து, 'அரசாளுதற்குரிய இலக்கணம் உனக்கே உண்டு' என்று சொன்னான். 'அரசாளுதற்குரியவனாக என் தமையன் செங்குட்டுவனிருக்க, நீ முறைமை கெடச் சொன்னாய்' என்று அச்சோதிடனைக் கோபித்துப் பார்த்துத் தமையனாகிய செங்குட்டுவனது

ஆட்சி உரிமைக்குக் கேடு வாராதபடி ராஜ்ய செல்வத்தை வெறுத்து அன்றே துறவியாகிக் குணவாயிற் கோட்டம் என்னும் இடத்தில் வசித்து, "மோகமுமாகிய இராச்சியத்தை ஆளுதற்கு இருக்கும் வேந்தனல்லவோ நீ?" என்று முன் நிகழ்ந்ததும் பின் நிகழப்போவதுமாகிய இளங்கோவடிகள் வரலாற்றை றக்கூறிற்று. இவ்வாறு தன் வரலாறுரைத்த கண்ணகி தேவியின் பெருமை தங்கிய சரித்திரத்தைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அடியிற்காணுமாறு இளங்கோவடிகள் உபதேசிக்கிறார்:

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும்.........பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினல் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென."

இலங்கை அரசன் கஜபாகுவும், கொங்குமண்டலத்து இளங்கோசரும், சோழன் பெருநற்கிள்ளியும், வேறு பல அரசரும் தங்கள் நாட்டகத்துக் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து, விழாக்கள் செய்து வழிபட்டார்கள். அதுமுதல் பத்தினி வணக்கம் பரவி நாடு செழிப்புற்றுத் திகழ்ந்தது.

# அரும்பதவுரை

(எண்கள் பக்கங்களைக் குறிப்பன.)

1. கன்னல்-கரும்பு
நெற்கூடு-நெல்லைத் தொகுத்துள்ள சேர்
2. பாக்கம் - கடற்கரையைச் சார்ந்த ஊர்
மான் கண் சாளரம் - மான் கண் போலச் செய்துள்ள பலகணி (ஜன்னல்)
கூலவீதி-தானியம் விற்கும் வீதி
முகவாசம்-தாம்பூலத்தோடு சேர்த்து வாயிடும் வாசனைப் பொருள்.
காருகர் - நெசவு தொழிலாளர்
3. மருத்துவர் - வைத்தியர்
ஆவணவீதி - கடைத்தெரு
சூதர்-அரச சபையில் நின்று அரசனைப் புகழ்வோர்
மாகதர்-அரச சபையில் இருந்து அரசனைப் புகழ்வோர்
நாளங்காடி – (நாள் + அங்காடி)-பகல் கடை
மன்றங்கள்-(சபைகள் கூடும்) பொதுவிடம்
4. பொற்பால்-அழகினல்
5. அங்கயங்கடவுள்-அக்கினி தேவன்
6. தலைக்கோல் பட்டம்-நாடகக் கணிகையர்க்கு அரசர் அளிக்கும் பட்டம்
7. கவினழிந்து - அழகு கெட்டு
சமயவாதி-மதவாதி
நாளங்காடிப்பூதம் - முசுகுந்தன் தேவருலகினின்றும கொணடு வந்து நாளங்காடியில் நிறுவிய பூதம்
சதுக்கபூதம் - நாற்சந்தி கூடுமிடத்தில் நிற்கும் பூதம்
8. பாவை விளக்கு-பெண் பிரதிமைகள் ஏந்திய தீபம
நாற்றுங்கள்-தொங்க விடுங்கள்
உரைசால் மன்னன்-புகழ்மிகுந்த அரசன்
திருமஞ்சனம்-குடநீர் முழுக்கு
பலம்தவன்-பலராமன்
9. வீறு சிறப்பு
வைகறை-விடியற் காலம்
ஆற்று வரி-ஒரு வகை இசைப்பாட்டு
10. திருமுகம்-கடிதம்
பன்னிப் பன்னி-பேசிப் பேசி
அவலம்-துன்பம்
11. சிறு பூளை-ஒரு செடி
புன்முறுவல்-குறுஞ் சிரிப்பு
13 இடைகழி வாயில்-நகர்வீதியின் ஒழுங்கிலிருந்து இடையே பிரிந்து வெளிச்செல்லும் வழி
சிலா தலம்-வட்டமாயமைந்த ஆசனக்கல்
15. பொய்க்குழி-மறைந்த குழி

15. உகள—துள்ள
மலங்கு-ஒரு மீன்
தேன் இருல்-தேன் கூடு
குடங்கை-குழிந்த உள்ளங்கை
16. வாய்த் தலை-வாய்க்காலின் தலைப்பு
கடைசியர்—மள்ளப் பெண்கள்
அநகசாரணர்—சைன மதத்து அறமுரைக்கும் பெரியார்
தூர்த்தன்-ஒழுக்கமில்லாதவன்
17. சாபவிடை-சாபவிடுதலை
18. தென்னவன்-பாண்டியன்
19. ஐந்திர வியாகரணம்-இந்திரன் இயற்றிய வடமொழி இலக்கணம்
20. வெண்தோடு (தாழையின்) வெள்ளிய மடல்
21. அந்தரி—காளி
கொற்றவை-காளி
தேவராட்டி-ஆவேசமுற்று ஆடுகிறவள்
22. வனசரம்—வனத்தில் சஞ்சரிக்கும் மிருகம் முதலியன
ஜலசரம்—நீரில் வாழும் முதலை முதலியன
25. பாணர்-யாழ்ப்பாணர்
மறம்-வீரம்
27. விழுக்குடி—உயர்ந்த வமிசம்
ஏதம்-துன்பம்
31. அழுக்காறு-பொறாமை
34. காளிந்தி-யமுனை நதி
35. அடைக்காய்-பாக்கு
இடும்பை-பெருந்துன்பம்
36. செவிலித்தாய்-வளர்க்கும் தாய்
குரவை-எழுவர் பெண்கள் கைகோத்தாடும் கூத்து
37. நிமித்தம்-கெட்ட சகுனம்
தாது எரு மன்றம்-பூந்தாதுகள் எருவாய்க் கிடக்கும் பொது இடம்
வரிசை-சன்மானம்
விநயத்தோடு-வணக்கத்தோடு
பொதிவாய்-மூடிச்சின் வாய்
38. அக்கசாலைப்பள்ளி-தட்டான் உலைக்களம்
ஊடல்—சிறு கோபம்
42. உற்பாதம்-துன்னிமித்தம்
உபசாந்தி-பரிகாரம்
47. தேராமன்ன—(உண்மை) தெளியாத அரசனே
48. பரல்—(ஒலி உண்டாவதற்கு உள்ளேயிட்ட) சிறிய கற்கள்
அரி-பரல்
49. பட்டிமை—அடங்காமை
56. வெப்புநோய்—குட்டநோய்
குரு-ஒரு நோய் (கொப்புளம்)
சிறுகுடி-மலைப்பக்கத்தூர்
கொடுமணி—ஓசை கடிதான மணி

60. வெங்கிட்டு-முதுகிட்டு

61. இலச்சினை-முத்திரை (Seal)

62. ஆசான்-புரோகிதன்
பெருங்கணி-சோதிடர் தலைவன்
தாபதர்-தவசிகள்
மௌத்திகன்—நிமித்தம் கூறுவோன்

63. நாட்கொள்ளல்-நல்வேளையில் பரஸ்தானம் செய்தல்
ஐம்பெருங்குழு-அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதுவர், சாரணர்கள் கூடிய சபை
எண்பேராயம்-கரணத்தியலவர், கருமகாரர், பண்டாரத்தலைவர், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர்
கருமவினைஞர்-தேசத்தின் ஆட்சி நடத்துவோர்
கணக்கியல் வினைஞர்-வரி வாங்குவோர்
பாடி-படைகள் தங்கிய இருப்பு (Camp)

65. நூழிலாட்டு-ஒருவீரன் பகைவர் படைகளைக் கொன்று குவித்துத் தன் வேலினைச் சுழற்றியாடுதல்
படிமம்-வடிவம்

66. பிக்குணிக் கோலம் பௌத்த சந்நியாசினி வேடம்

67. குஞ்சர ஒழுகை-யானைகளின் வரிசை
கோநகர்—ராஜதானி
அரங்கு—நாடகசாலை
கொட்டிச் சேதம்-சிவபிரான் ஆடிய ஒரு கூத்து

69. அடித்தோழி-முதன்மையான தோழி

72. மாற்றுள்-சக்களத்தி

## செய்யுட்களின் குறிப்புரை

16. கம்புட்கோழி - சம்பங்கோழி, கானங்கோழி - காட்டுக் கோழி, உள்ளு-உள்ளான் என்னும் சிறிய பறவை; ஊரல்-இருவை; நீர்மேல் ஊர்ந்து நீந்துதலால் இப்பெயர் பெற்றது. புள்ளு-கணந்துட்புள், புதா-பெருநாரை; போதாவென்பதன் விகாரம்.

17. குணமென்னும் குன்று-நற்குணமாகிய மலை, நின்றார்-துறவிகள், கணமேயும்-க்ஷணப்போதாயினும், காத்தல்-தடுத்தல்.
நெறியினீங்கியோர்-நன்னெறி தவறியவர். நீரல-(நீர்மை+அல) நல்ல தன்மையல்லாத தீய சொல்.

21. கொங்கச்செல்வி, குடமலையாட்டி, தென்றமிழ்ப்பாவை என்று கண்ணகியைக் கூறியது, இனி இந்நாடுகளில் இவள் தெய்வமாகக் கொண்டாடப்போவதை உட்

கொண்டு, கொங்கு-கொங்குநாடு, குடமலை-மலைநாடு, தென்றமிழ்நாடு-தமிழ்நாடு, ஒரு மாமணி-முழுமாணிக்கம் போல்வாள.

23. அருந்திறல்வேனில்-முதுவேனில், அலர்களைந்து-பூக்களைத் தாங்காது நீக்கி.

24. வடியாக்கிளவி-குற்றம் நீங்காத சொல், குரவர் பணி-பெற்றோர்க்குச் செய்யும் பணிவிடை, கையறு-செயலற்ற, குலப் பிறப்பு ஆட்டி-நற்குடியிற்பிறந்த கற்பையாளுதலுடைய கண்ணகி.

32. வானம் பொய்யாது-கால மழை பெய்தல் தவறாது, வளம் பிழைத்தல்-வளஞ்சுருங்குதல்.

41. 'கண்ணகி தன்கேள்வன் காரணமாக......வந்தது,(இது) பண்டைவினை : இருவினையும் (தவறாது) நண்ணும்; (ஆதலால், உலகத்தீர்) நல்லறமே நண்ணுமின்' எனக் கூட்டிப் பொருள்கொள்க.

42. கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்-பசுவின் கன்றையே குறுந்தடியாகக் கொண்டு விளங்கனியை உதிர்த்த கண்ணன். கன்றாகவும் விளாமரமாகவும் தன்னைக் கொல்ல வந்த அசுரர்களைக் கண்ணன் கொன்ற கதையைக் கருதியது இது.

43. மலையாரம்-சந்தனம், கடல் ஆரம்-முத்து, கோவா-கோக்கப்படாத, குருந்து-ஒரு மரம், ஒசித்தான்-ஒடித்தான், மடம் தாழும்-அறியாமை பொருந்திய.

49. இன்னா-துன்பம், அல்லவை-பாவம், அறம் கூற்றம்-தருமமே யமன்.

55. உம்மை வினை-பழவினை, உருத்த காலை-வருத்திய காலத்தில், செய்தவம்-முன் செய்த நல்வினை, தீவினைப்பயனைத் தனியாகவும், நல்வினைப்பயனைத் தனியாகவும் அநுபவித்தே தீரவேண்டும் என்பதாம்.

61. கடல் கடம்பு-கடல் தீவில் பகைவரது கடம்ப மரத்தை, எறிந்த-வெட்டிய

62. தோட்டுணை.(தோள்+துணை)-மனைவி, துறவு-தவம். மன்னனது திருமேனியாகிய சேரன் முகம் வாழ்க என்க.

76. புறஞ்சொல் போற்றுமின்-புறம் கூறுதலாகிய தீக்குணம் உம்மிடம் புகாமல் பரிகரியுங்கள், பொய்க்கரி-பொய்ச்சாட்சி, பொருண்மொழி-மெய் வார்த்தை, பிழை உயிர்-மரிக்கிற உயிர், அறமனை-இல்லறம், வெள்ளைக்கோட்டி-வீணர் சபை, உளநாள் வரையாது-உள்ள ஆயுள் நாள் விருதாக்கழியாமல், ஒல்லுவது-இயலுவது.